# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (06-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:131


## அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி வாக்களிப்பு

கொழும்பு,ஏப்.6

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அதற்கு எதிராக ஐதே. கட்சி வாக்களித்தது.

இந்தப் பிரேரணை மீதான விவாதம் நேற்றுப் பிற்பகலில் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற வாக்களிப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 111 வாக்குகளும் எதிராக 89 வாக்குகளும் கிடைத்தன.

பிரேரணைக்கு எதிராக ஐ.தே. கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன வாக்களித்தன.

நீண்ட காலத்தின் பின்னர் ஐ.தே. கட்சி, அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக முதல் தடவையாக வாக்களித்திருக்கின்றது. அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார். (உ-3-4)

## ரணிலுக்குப் புலிகளால் கொலை அச்சுறுத்தலாம்!

### அதனால் அவரின் அ'புர விஜயம் ரத்து

கொழும்பு,ஏப்.6

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து -

நாளை முதல் அவர் அனுராதபுரத்தில் மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனுராதபுரத்தில் அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி நடத்தவிருக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புக்கு வரும் தமிழர்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியாது



### மிதிவெடியில் கால் இழப்பு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பளை மாசார் பகுதியில் தேங்காய் பிடுங்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தில் அனுருத்த அறிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்6

**"வடக்கு - கிழக்கில் இருந்து தமிழ்மக்கள் கொழும்புக்கு வருவதற்குத் தற்போது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தமுடியாது. இந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்தினால் அது விடுதலைப் புலிகள் இலகுவில் கொழும்புக்குள் ஊடுருவ வாய்ப்பாகிவிடும்"**

**பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளிவரும் செய்திகளில் எந்தவித உண்மையுமில்லை. அங்கு தாராளமாக உணவுப் பொருள்களும் கையிருப்பில் உள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு உணவு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் நேற்று அடிக்கடி அமளிதுமளி!

### இடையிடையே சபை ஒத்திவைப்பு

கொழும்பு,ஏப்.6

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சமயம் அங்கு அமளிதுமளி ஏற்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி பேசும்போது, ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் குறுக்கிட்டுப் பேசிய போதும் -

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் உரையாற்றிய போது அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின்சில்வா குறுக்கிட்டுப் பேசிய போதும் -

சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. சபை நிகழ்ச்சிகளை நடத்த முடியாத நிலையில் சபாநாயகர் அடிக்கடி சபையை ஒத்திவைக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. (உ-3)

## மட்டக்களப்பில் நேற்று பாடசாலைப் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு,ஏப்.6

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்விச் சமூகம் மீதான இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்து வருவதை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் நேற்றுப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நகரப் பகுதியில் ஒருசில பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் இயங்கவில்லை. நகருக்கு வெளியே விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டுக் கிடந்தன. (உ-3-9)

## சுழற்சிமுறை உண்ணாவிரதத்தை சுகாதார ஊழியர் இடைநிறுத்தினர்

### எனினும் காரணம் குறித்து முரண்பாடான தகவல்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.மாநகரசபை நிர்வாகத்தினால் தாமாகவே வேலையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுபவர்கள் என அறிவிக்கப்பட்ட, சபையின் குடும்ப நல உதவியாளர்கள், கடந்த மூன்று நாள்களாகத் தாம் நடத்தி வந்த சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாக அறிவித்திருக்கின்றார்கள்.

இது தொடர்பாக நேற்றைய திகதியிட்டு பத்திரிகைக் குறிப்பு ஒன்றை அவர்கள் வெளியிட்டுள்ளனர். அதில் உண்ணாவிரதம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவது பற்றிய அறிவிப்பைக் குறிப்பிட்டுக் 'காரணங்கள்' என்ற உபதலைப்பில் சில விவரங்களையும் 'பிற்குறிப்பு' என்ற குறிப்போடு மேலும் சில தகவல்களையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், நேற்றைய திகதியிலே அவாகள் எழுதிய பிறிதொரு கடிதத்தில் உண்ணாவிரம் இடைநிறுத்தப்படுவதற்கு வேறுகாரணங்களை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் ஆயுதக் கிடங்கு அல்வாயில் சிக்கியது?

கொழும்பு,ஏப்.6

பருத்தித்துறைக்கு மேற்கே அல்வாய் தெற்கில் படையினர் மேற்கொண்ட தேடுதலில் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் - ஒன்பது, ஜி.303 ரகத் துப்பாக்கிகள் - 14, எஸ்.எம்.ஜி. துப்பாக்கிகள் - 7, 303 ரக எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் - இரண்டு, எம்.16 ரகத் துப்பாக்கி - ஒன்று, 303 ரக மகஸின்கள் - 48, ஏ.கே.47 மகஸின்கள் - 36, எல்.எம்.ஜி. மகஸின்கள் - 29, எஸ்.எம்.ஜி. மகஸின்கள் - 3 மற்றும் பல ஆயுத தளபாடங்களும் மீட்கப்பட்டதாகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றிய 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் போது இங்கிருந்து விடுதலைப் புலிகள் சென்ற சமயம் இந்த ஆயுதங்களை விட்டுச் சென்றிருக்கலாம் என்றும் -

நன்கு நிர்மாணிக்கப்பட்ட குழி ஒன்றில் இருந்து 'கிறீஸ்' பூசிய நிலையில் அவை மீட்கப்பட்டன என்றும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

### சூட்டுக் காயங்களுடன் சிப்பாயின் சடலம் ஒப்படைப்பு

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று மாலை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.நகரில் உள்ள 512 ஆவது படையணியினரால் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலத்தின் நெற்றியிலும், கழுத்துப் பகுதியிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இந்த மரணத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

## சித்திரவதைகளுக்குக் காரணமான படையினர் மீது உரிய நடவடிக்கை!

### வவுனியா நீதிவான் உத்தரவு

வவுனியா,ஏப்.6

வவுனியாவில் பொலீஸார் மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு இருப்பது சட்ட வைத்திய அதிகாரிகளின் வைத்திய பரிசீலனையின் பின்னான அறிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதை அடுத்து அந்தப் பொலீஸார் மற்றும் இராணுவத்தினருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

வவுனியா நீதிமன்ற நீதிவான் எம்.இளஞ்செழியன் இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கின்றார்.

ஐந்து சந்தேக நபர்கள் பொலஸ் காவலில் இருந்தபோது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது அவர்களை மருத்தவ சோதனைக்கு உட்படுத்திய கொழும்பு சட்ட வைத்திய

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## A/L 2003 புதிய பிரிவு

நாளை 07-04-2001 (8 மணி)
ஆரம்பமாகின்றது.

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(86308)

---

☆ இன்று இரண்டாவது நாளாக ☆

## திருமறைக் கலாமன்றம்

மனிதம் எமது பாடல் — தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை — மனிதம் எமது தேடல்

## காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)

**மன்ற அரங்கில்**

மாலை 7.00 மணி

அனுமதி 10.00 ஆசனம் 20.00

இந் நாடக மேடையேற்றத்துக்காக ஊரடங்கு நேரம் இரவு 11.00 மணிவரை தளர்த்தப்பட்டுள்ளது.

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2393

விளம்பர அன்பளிப்பு:

**ஜீவிதன் பல்பொருள் வாணிபம்**
247, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**V.மனோகரன்**
சாவகச்சேரி வீதி,
மந்திகை, புலோலி.

**ராஜன் தொலைத்தொடர்பு சேவை**
பருத்தித்துறை.

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**
77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**செல்வா தொலைத்தொடர்பு சேவை**
18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(C/16113)

---

## ராஜா யாழ்ப்பாணம்

கடைசி வாரம்

**விஜயகாந்த், மீனா, பிரபுதேவா**

நடிப்பில் (C/16006)

## வானத்தைப்போல

காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)

11.04.2001 முதல்

## ரோஜாவனம்

---

## நாகம்ஸ் சுன்னாகம்

**அஜித், கார்த்திக், மீனா**

நடித்த

## ஆனந்தப் பூங்காற்றே

(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)

(86329)

---

## லஷ்சுமி இணுவில்

கடைசி வாரமாக

**விஜயகாந்த், மந்த்ரா, செந்தில்**

நடிப்பில்

## சிம்மாசனம்

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

---

## COMPUTER FOR SALE

Intel Pentium - II MMX 350 MHz
Computer with Following facilities,
6.4 GB Hard Disk Drive, 1.44 MB
Floppy Disk Drive, CD Drive & 14"
SVGA Digital Colour Monitor
Sound card speaker etc.

Inspection on Saturdays & Sundays.

Address:
**117/3, Arasady Road, Jaffna. T.P.No:- 2609, 2761**

(86315)

---

## JAFFNA DISTRICT BADMINTON KNOCK OUT TOURNAMENT

Organised by The Jaffna University Sports Council
sponsored by Hari Kanan Printers.

1. OPEN (Men/ Women)
   - Singles.
   - Doubles.
   - Mixed Doubles.
2. CLASHES AMONG TEAMS (Men/ Women)

**Entries closes on 24.04.2001.**

Entry forms from the Department of Physical Education, University of Jaffna

SPORTS COUNCIL
UNIVERSITY OF JAFFNA

05 .04. 2001

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும்

## முழு நிலா நாள் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
நாள் : நாளை (07-04-2001) சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி(புதிய நேரம்)
தலைமை : திரு.க.சி.குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
தலைப்பு : "புதிய கல்விச்சீர்திருத்தங்கள் - அண்மைக்கால அனுபவங்கள்"
கருத்துரை வழங்குபவர் : பேராசிரியர் க.சின்னத்தம்பி
தலைவர், கல்வியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர்சங்கம்.

SPONSORE:-
**HARIKANAN PRINTERS**
**OFF-SET PRINTERS OF THE NORTH**
424A, K.K.S. ROAD, JAFFNA. T.P.No- 3081. (C/16115)

---

உ
சிவமயம்

# மாபெரும் திறப்பு விழா

எம் இனிய வாடிக்கையாளர்களுக்கு, எங்கள் சேவை மேலும் விரிவுபடுத்தப்படுகின்றது.

**163,165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட**

# யசோ மோட்டோர்ஸ் அன் காட்வெயார்ஸ்

**எனும் ஸ்தாபனத்தை வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்களின் ஆதரவுடன்**

*நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் இன்று பங்குனித் திங்கள் 24ஆம் நாள் (6-4-2001) வெள்ளிக்கிழமை காலை 8-57மணி முதல் 9.43 மணி வரையுள்ள பூர நட்சத்திரம் கூடிய சுபவேளையில், விநாயகப் பெருமானின் திருவருளினால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.*

*அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.*

**163,165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல.: 021-2544**

(C/16101)

**ச.யசோதரன் (யசோ)**
**உரிமையாளர்**

---

*மாபெரும் மலிவு விற்பனை!*

புத்தாண்டை முன்னிட்டு அனைத்துப் புடைவை ரகங்களும் உங்கள் மனம் போல் தெரிவுசெய்து மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# விநாயகர் புடைவையகம்

இல.63 A, 62 A, 61,
நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

# உதயன்

## மூலகாரணம் சட்டங்களே

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பாலியல் வல்லுறவுக் குற்றத்தைச் சகஜமாகப் புரிந்துவிட்டு, பாதிப்பு ஏதும் இன்றித் தப்பிச் செல்வது வழமையாகிவிட்டது —

இவ்வாறு மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சந்தேகத்தின் மீது தடுத்து வைக்கப்படும் பெண்களின் பாதுகாப்பைப் பேணாது உதாசீனம் செய்யப்படுவதையும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கோடிட்டுக் கூறியுள்ளது.

அண்மைக் காலத்தில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களிலும் ஆகப் பிந்தி மன்னாரிலும் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிய முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே மன்னிப்புச் சபை இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.

பாலியல் வல்லுறவு மட்டுமன்றி ஏனைய குற்றச் செயல்களை — மனித உரிமை மீறல்களை — புரிவோரும் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் உதவியுடன் தண்டிக்கப்படாமலே தப்பிவிடுகிறார்கள்.

இந்தச் சட்டங்கள் இப்போது தமிழ் மக்களை மட்டுமே அடக்கி ஒடுக்குவதற்கும், மனிதாபிமானமோ, மனிதநேயமோ இல்லாமல் நடத்துவதற்கும் கருவிகளாக இருக்கின்றன; கேடயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. சிங்களமக்கள் மீது இந்த இரண்டுசட்டங்களும் பெரிதாக எய்யப்படுவதில்லை; அதனால் அவர்களுக்குப் பாதிப்புகளும் குறைவு.

அதன் காரணமாக, சிங்கள மக்களுக்கோ அவர்களின்தலைவர்களுக்கோ அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதச் சட்டமும் சேர்ந்து தனியான ஓர் ''அரசாங்கம்'' — ஜனநாயக வரம்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு கொடுங்கோல் ''அரசாங்கம்'' — என்பது தெரியாது. அதனை உணரும் வாய்ப்பு அவர்களுக்குக் குறைவு.

தலையிடியும் காய்ச்சலும் அவரவருக்கு வந்தால்தானே உபாதையையும் உடல் தாக்கத்தையும் உய்த்துணர முடியும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் படையினர் எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டுத் தப்பிவிட முடிகிறது.

தமிழ் மக்களை நோக்கி எய்து அவர்களை மனிதர்களாக அன்றி மிருகங்களாக நடத்துவதற்கென்றே இயற்றப்பட்ட சட்டமாகவே அது அமைந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களைக் குறிவைத்தே இயற்றப்பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்திற்கு வெளித்தோற்றத்துக்குப் பல திருத்தங்களும், தளர்வுகளும் அவ்வப்போது செய்யப்பட்ட போதிலும் அதன் இரும்புத் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வெறுமனே உலகத்தை ஏமாற்றும் முயற்சிகளாகவே திருத்தங்களும் தளர்வுகளும் அமைந்தன.

படையினரை அவர்கள் செய்யும் சில குற்றங்களுக்குத் தண்டனை பெறாமல் தப்பிக்க உதவிய குற்றவிலக்குச் சட்டம் திருத்தப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்டசட்டம் திருத்தப்பட்டதோ என்று சந்தேகப்படும் வகையில் நடைமுறைகள் அமைந்துள்ளன.

தமிழர்களுக்கு எதிரான எல்லாப் பாதிப்புகளுக்கும் மூலகாரணம் இரண்டு சட்டங்களுமே என்பது வெளிச்சம் ஆகையால் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்தற்கு இவை இரண்டையும் ஜனநாயக உரிமைகளைப் பேணும் சட்டங்களாக மாற்ற வேண்டும்; நீக்கிவிடுவது விரும்பும் பெறுபேறுகளைத் தரும்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 6

கொழும்புத்துறை புங்கன் குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அபிஷேக திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்களுக்கு அபிஷேகத் திருவிழா இடம்பெறும்.

தினமும் காலை 10 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

(க-17)

★ ★ ★

யாழ். அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரசக்திப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 6

சங்கரத்தை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை 10மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 2 மணிவரை நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ், வண்ணார்பண்ணை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 12தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் நடைபெறும்.

(க-73)

★ ★ ★

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 6.30 மணிக்கு வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தக்கரையில் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-3)

★ ★ ★

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை மறுநாள் சனிக்கிழமையும் பூங்காவனத் திருவிழ ஞாயிறுக்கிழமையன்றும் இடம்பெறவுள்ளன.

(ஐ-135)

★ ★ ★

கொக்குவில்மேற்கு மணியர்பதி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகேசுர பூசையும் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-6)

★ ★ ★

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுத் தினத்தன்று காலை 8 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(ஐ)

ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் அம்பாளின் விக்கிரகம் வீதி உலா வரும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி திருக்குளிர்த்தி உற்சவமும் அன்னதானமும் இடம்பெறும்

★ ★ ★

யாழ். வண்ணை கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இங்கு தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவத்தை யொட்டிய மஞ்சத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று மாலை விசேட அபிஷேகம், பூசைகள் நடைபெற்று மாலை 6 30 மணிக்கு மின் சாரதீபங்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் விநாயகர் பெருமான் வீதியுலா வருவார்.

(க—152)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் இடம்பெறும். (க—3)

★ ★ ★

வல்வை வைத்தீஸ்வர ஆலய ரதோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் ஞாயிறு காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-109)

★ ★ ★

பருத்தித்துறை மாதனை பத்திரகாளி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுளளது. [க-173]

★ ★ ★

மேலைப் புலோலி வாணர் குடியிருப்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

(க-173)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சர்வமங்கள இராஜேஸ்வரி அம்பாள் கோவிலில் நாளை சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று மாலை 4 மணிக்கு அபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெற்று சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

கொக்குவில் அருள்மிகு ஸ்ரீ கிருபாகர சிவசுப்ரமண்ய சுவாமி கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-4)

## நாளை

பங்குனி 25
சனிக்கிழமை
திதி: சதுர்த்தசி
முற்பகல்: 11.15 வரை.
பூரணை விரதம்
நட்சத்திரம்: உத்தரம்
முற்பகல் 8.24 வரை
சுபநேரம்: 3.08 — 4.38
ராகுகாலம்: 9.08 —10.38
(பழைய நேரப்படி)

# விஞ்ஞான கட்டுரைப் போட்டி வெற்றி பெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட, பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விஞ்ஞான கட்டுரைப் போட்டியில வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர் விவரங்களும் பாடசாலைகளும் வருமாறு:

★ முதலாம் இடம் தர்மிகா அனோஜ் லியோ மரியதாஸ்—திருக்குடும்ப கன்னியர்மடம்.

★ இரண்டாம் இடம்: கணபதிப்பிள்ளை பிரசன்னா—விக்டோறியாக் கல்லூரி.

★ மூன்றாமிடம்: சுமங்கலி கைலைநாதன்—வேம்படி மகளிர் கல்லூரி.

★ சிறப்புச் சான்றிதழ்களைப் பெறுபவர்கள்: சி. ஆரபி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ப. ராதிகா (மெதடிஸ்ற் உயர் கல்லூரி), த. தீபவதனா (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி) ச. ஜெனோதினி (விக்னேஸ்வராக் கல்லூரி), கு. மைதிலி (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), மருசலீன் ஜஸ்ரின் (புனித. பத்திரிசியார் கல்லூரி), ச. சுலக்ஷனா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும், இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ். பல்கலைக்கழ கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். யாழ். விஞ்ஞான சங்கத்தின் கூட்டத் தொடரில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன.

(க-6)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 6

வடக்கு — கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வந்த ஹொக்கிச் சுற்றுப் போட்டி தவிர்க்க முடியாத காரணங்கலால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார்.

ஆட்டங்கள் இடம்பெறும் திகதிகள் கழகங்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(க-3)

★ ★ ★

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி ஆடுகளததில் இடம்பெறவிருக்கும் ஆட்டங்களில பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★15 வயதுப்பிரிவு—பரியோவான் கல்லூரி எதிர் சோமஸ்கந்தாக் கல்லூரி (இறுதிப் போட்டி)

★ 17 வயதுப்பிரிவு-சோமஸ்கந்தாக் கலலூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ 19வயதுப்பிரிவு-சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆடுகளத்தில இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் 19 வயதுப்பிரிவு ஆட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும் யாழ். மத்திய கல்லூரியும் மோதுகின்றன. (உ 3)

திருநெல்வேலி திரீஸ்ரார் கிளப்பின் ஏற்பாட்டில் மேசைப் பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம் பெறவிருக்கின்றன.

(க-3)

★ ★ ★

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானததில் இடமபெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின்விவரம் வருமாறு:-

15 வயதுப் பிரிவு

★ யாழ். இந்துமகளிர் கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி.

கனகரட்ணம மத்திய ம.வி அணி எதிர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி.

17 வயதுப் பிரிவு

★ வேம்படி மகளிர் கலலூரி அணி எதிர் அச்சுவேலி உடைக்காடு ம வி அணி.

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி எதிர் கனகரட்ணம் மத்திய ம.வி அணி.

19 வயதுப் பிரிவு

★ வேம்படி மகளிர் கல்லூரி அணி எதிர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி

(ய8-6)

உதயவாக்கு

தெய்வ நம்பிக்கைக்கு அடுத்தது உழைப்பின் நம்பிக்கை.

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

# எண்ணி மனம் நாடுதடி

வண்ணைத் தலமமர்ந்த வைத்தீஸ்வரப் பரனை
எண்ணி மனம் நாடுதடி — கிளியே
அன்பிலுருகுதடி

சித்தராகவே வந்து அற்புதங்கள் செய்பவராம்
பித்தரிவர் பெருமைதனைக் — கிளியே
பேச இனிக்குதடி.

பூசனாருளக் கோயிலில் நேசமாய் அமர்ந்தவரின்
தேசுதிகழ் காட்சிதனைக் — கிளியே
தேடிநான் காண்பேனோடி

கல்லாலின் கீழ் நால்வர்க்குச் சொல்லாமற்
சொன்னவரை
அல்லும் பகலும் தேடிக் — கிளியே
எங்கு மலைந்தேனடி

வாசமலர் கொன்றை தும்பை கங்கை மதிசூடியவர்
வந்து எனை ஆள்வாரென்றே — கிளியே
வாழ்வில் திடம் கொண்டேனடி.

தமிழிசைக் கவிஞர்
ஏ. கே. ஏரமபமூர்த்தி
(இன்று தீர்த்தோற்சவத் திருவிழா)

# கொம்பனித்தெரு ஆலயத்தின் சூழலில் திடீர்த் தேடுதல்

கொழும்பு கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதேசத்தைச் சுற்றி வளைத்து செவ்வாய்க்கிழமை காலை இராணுவத்தினர் திடீர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்

இராணுவத்தினர் சுமார் 300 பேர் காலை முதல் இப்பகுதியில் தீவிர தேடுதலிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவ உயர் அதிகாரிகள் இராணுவத்திற்கு இறை ஆசி வேண்டி. சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் விசேட பூசையொன்றை நடத்தியதை முன்னிட்டே இந்தச் சோதனைகள் இடம் பெற்றதாகப் பின்னர் தெரியவந்தது.

(க)

## நன்றி செலுத்த வேண்டிய கடமைப்பாடு

கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை துப்பாக்கி முனையில் கொள்ளைக்காரர்களால் வன்முறையைப் பிரயோகித்து நடைபெற்ற கொள்ளையை அடுத்து அன்றிரவு எமது கிராம வாலிபர்கள் வீறுகொண்டு தங்களது உயிரையும் பொருட்படுத்தாது கொள்ளையர்களைத் தேடித் திரிந்தது எனது மனதிற்கு நெகிழ்வைத் தரும் செயலாகும்.

இத்தகவல்களைப் பெற்றுக்கொண்ட 524 ஆவது படையணிக்குரிய பிரிகேடியர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தமையால் வடமராட்சியில் உள்ள சகல முகாம்களின் பொறுப்பதிகாரிகள் எனது இருப்பிடத்திற்கு வந்து புலன் விசாரணை செய்து ஆறுதல் கூறிச் சென்றனர். அத்துடன் நெல்லியடிப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பலதரப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஆற்றிய பணிக்கு நன்றிகள்.

இச்செய்தி கேட்டு எனது வீட்டுக்கு வருகை தந்து ஆறுதல் கூறிய அயலவர், உறவினர், நண்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியுடையேன்.

தெய்வத்தின் சோதனையால் எனது வீட்டில் நடைபெற்ற கொள்ளையின் போது களவாடப்பட்ட கைத்தொலைபேசி (Hand Phone) யினை எடுத்துச் சென்றவர்களோ அல்லது அதனை வாங்குபவர்களோ எச்சந்தர்ப்பத்திலும் அதனை உபயோகிக்கமுடியாது. இத்தொலைபேசியை எடுத்துச் சென்றவர்கள் அதனை மீண்டும் எனக்குக்கிடைக்கக் கூடியவகையில் நடப்பார்களாயின், அவர்களுக்கும் நான் நன்றியுடையவனாக இருப்பேன்.

ப ஈஸ்வரநாதன்
ரவீன்ஸ் ரெலிகொம்,
சிங்கத்தின் வீடு,
கரவெட்டி இழக்கு,
கரவெட்டி.

T. P. 070212408
E. Mail:- easan @ dinet. lk

(சி/16080)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-10)

## சலரோக விழிப்பு மாதம் பிரகடனம்: வடமராட்சிப் பகுதி மக்களுக்கு தினசரி இரத்தப் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஏப். 6

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் இம்மாதம் சலரோக விழிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் வடமராட்சி மக்களின் நன்மை கருதி சலரோகத்திற்கான இலவச இரத்தப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமான இந்தப் பரிசோதனைகள் இம் மாதம் 30 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரையும் நடைபெறவுள்ள இப் பரிசோதனையில் தினமும் 25 பேர் மட்டுமே பரிசோதிக்கப்படுவர்.

பரிசோதனைக்குச் செல்லவுள்ளவர்கள் முதல் நாள் இரவு 8 மணிக்கு உணவு உட்கொண்டால் மறுநாள் காலை இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளும் வரையும் தண்ணீர் கூட அருந்தாமல் வெற்று வயிற்றுடன் இருத்தல்வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-10)

## கண்ணீர் அஞ்சலி

யா / மானிப்பாய் மகளிர் கல்லூரியில்
ஊழியராகக் கடமைபுரியும்
**திரு. நாகமுத்து இராசு**
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி இராசமலர் இராசு**

அவர்கள் சிவபதம் எய்தியதையிட்டு, அவரது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கிறோம்

அதிபர், உபஅதிபர்,
ஆசிரியர்கள், ஊழியர்கள்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

(86287)

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

அச்சுவேலி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும்
யாழ். மத்திய கல்லூரி (தேசியப் பாடசாலை) யின்
இந்நாள் அதிபருமான
**திரு. க. இராசதுரை**
அவர்களுக்கு நன்றி.

அச்சுவேலி மகாவித்தியாலயத்தை அச்சுவேலி மத்திய கல்லூரியாக மாற்றுவதற்காக மாகாண அமைச்சுடன் 1994 ஆம் ஆண்டே தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்த அச்சுவேலி மகாவித்தியாலய முன்னாள் அதிபரும், தற்போதைய யாழ். மத்தியகல்லூரி (தேசிய பாடசாலை) அதிபருமாகிய திரு. க. இராசதுரை அவர்களையும் அதற்கு உறுதுணையாகச் செயற்பட்ட பாடசாலை பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர்களையும், ஏனைய பாடசாலைச் சமூகத்தினரையும், மாகாண அமைச்சு அதிகாரிகளையும் மனதாரப் பாராட்டுகின்றோம். அதற்கான உளமார்ந்த நன்றியையும் இத்தால் தெரிவிக்கின்றோம்.

கல்லூரியின் நலன்விரும்பிகள் சார்பில்
லயன் சபா. இரத்தினசிங்கம்,
லயன் சிதம்பரம் சந்திரலிங்கம் ஜே.பி.

(86277)

## கிணற்றில் விழுந்து குழந்தை பலி

கோப்பாய், ஏப். 6

அச்செழு கொலனியைச் சேர்ந்த 6 வயதுக் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமான சம்பவம், கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தயாபரன் விதுஜா என்ற குழந்தையே இச் சம்பவத்தில் உயிரிழந்தது.

இது குறித்து அச்செழு கிராம அலுவலர் எஸ் வரதராஜன் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து மரண விசாரணை நடத்தப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(க-72)

## கள் அடைக்கும் தொழிற்சாலை இயங்குகிறது

சண்டிலிப்பாய், ஏப். 6

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை இவ்வாரம் முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

பனம் கள் சீசன் ஆரம்பமானதை அடுத்தே இவ்வருடத்திற்கான உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சங்கத்தின் பொது முகாமையாளர் கி. குணரத்தினம் தெரிவித்தார்.

இவ்வருடத்தில் இத்தொழிற்சாலை மூலம் 50 ஆயிரம் போத்தல்களில் பனம் கள் அடைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ 135)

## கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

தென்மராட்சி, ஏப். 6

பளைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெறறது.

பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சூ. அலெக்ஸாண்டர் உபகரணங்களை வழங்கினார்.

(ம-117)

## எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காத நினைவலைகள்

19 ஆம் ஆண்டு | 10 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு



அமரர்
பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை
(நடுவில்)
(சட்டத்தரணியும், சமாதான நீதிவானும், பிரசித்த நொத்தாரிசும்)
தோற்றம்: 15-09-1912
மறைவு: 14-03-1982
திதி: 12-04-2001



திருமதி
சறோஜினி ஞானபண்டிதன்
(சறோ)
(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும)
தோற்றம்: 10-02-1956
மறைவு: 28-03-1991
திதி: 06-04-2001



திருமதி
மரகதவல்லி கணபதிப்பிள்ளை
தோற்றம்: 12-09-1925
மறைவு: 05-12-1998

எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்து எமக்கு
எல்லாம் வழிகாட்டிய அன்புத் தெய்வங்களே!
என்றும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு அகலாது!
உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி.

உங்களை நினைவு கூரும்:
குடும்பத்தினர்.

(86275)

## யுத்தத்தினால் அழிந்து சிதைந்துபோன

# சாவகச்சேரி நகரசபை கட்டடங்களை கட்டியெழுப்ப 25 கோடி ரூபா தேவை

தென்மராட்சி,ஏப்.6

யுத்தத்தினால் அழிந்து சுடுகாடாகியுள்ள சாவகச்சேரி நகரசபைக் கட்டடங்கள் மற்றும் நூல் நிலையங்கள் போன்றவற்றை மீண்டும் கட்டியெழுப்ப 25 கோடி ரூபா (250 மில்லியன்) செலவாகும் என சாவகச்சேரி நகர சபையினால் மதிப்பிடப்பட்டுள்ளது.

உடனடி, குறுகிய கால, நடுத்தர, நீண்டகால தவணைகளில் நகரப் பகுதியை நவீன முறையில் நிர்மாணிப்பதற்கே இந்தத் தொகை செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நகரப் பகுதியில் உள்ள நகர சபை அலுவலகம், பொது நூல் நிலையம், நவீன சந்தை, சந்தைக் கடைத் தொகுதிகள், பஸ் நிலையம், நகர மண்டபம், நுணாவில், மீசாலை ஆகிய இடங்களில் பொது நூல் நிலையம் ஆகிய கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கும், இவற்றுக்கான உபகரணங்கள் உட்பட ஏனைய பொருள்கள் தேவைகளுக்கும் என 159.63 மில்லியன் ரூபாவும் -

இப்பகுதியில் சேதமடைந்துள்ள வீதிகள், மதகுகள், பாலங்கள், துப்புரவு செய்யப்பட்டு திருத்தி அமைப்பதற்கு 86.50 மில்லியன் ரூபாவும் - செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

தற்போது சேதமடைந்துள்ள நவீன சந்தைக்குப் பதிலாக அதே இடத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்கும் பஸ் நிலைய வீதியிலும், பஸ் நிலையம் உள்ள இடத்திலும் வேம்படிச் சந்தியிலும் இரு மாடிகள் கொண்ட நவீன சந்தைக் கடைத் தொகுதிகளும் -

சந்தையின் கிழக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் கடைத் தொகுதிகளும், சந்தைக்குள் விற்பனைப் பிரிவுக்கட்டடங்களும் நிர்மாணிப்பதற்கும், தற்போது மீன்சந்தை அமைந்திருந்த இடத்தில் பஸ் நிலையம் அமைப்பதற்கும், நகரின் மத்தியில் நகர மண்டபமும், நகர சபை அலுவலகமும் அமைப்பதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சாவகச்சேரி நகர், மீசாலை, நுணாவில் ஆகிய இடங்களில் சேதமடைந்துள்ள பொது நூல் நிலையங்களை சகல வசதிகளும் கொண்டவையாக உருவாக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## தெய்வீக ஸ்தலங்களில்



மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் கடந்த மாத இறுதியில் மண்டலாபிஷேகப் பூர்த்தி நிகழ்வில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதம குருக்கள் சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்களும் காணப்படுகின்றார். (ம-6)



நீர்வேலி சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் நினைவாக வெளியிடப்பட்ட 'தேவி பிரதிஷ்டா விதி' என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் நூலின் முதற் பிரதியை வெளியிட்டு வைப்பதையும் நயினை மு.பரமசாமிக் குருக்கள் அதனைப் பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம். (ம)

### கப்பலில் வந்த 503 தபாற் பொதிகள்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 503 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 64 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)

### 500ரூபா, 1000ரூபா முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்பிரதம தபாலகத்திற்கு ஆயிரம் ரூபா மற்றும் ஐநூறு ரூபா பெறுமதியான முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை:-

குடாநாட்டின் ஏனைய உப தபாலகங்களுக்கும், முத்திரைகள் மற்றும் முத்திரை உறைகள் என்பன எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-6)

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO)

## உலக சுகாதார தினம் - 2001

ஏப்ரல் 7

தொனிப்பொருள் :- உளநலம்

உளநலம் குன்றியோரை
உடல் ரீதியாகவும், உளரீதியாகவும்
தீங்குகளிலிருந்தும், கேலிகளிலிருந்தும்
பாதுகாப்போம்.

TPO

# நிவாரண அரிசி பரிசோதிக்கப்பட்டே இம்முறை மக்களுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்மாவட்டத்திற்கு வழங்கவென நிவாரணப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. இம்முறை வந்துள்ள அரிசி தரமானதா எனப் பரிசோதிக்கப்பட்ட பின்னரே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே யாழ்.செயலகத்தில் அமைச்சரின் பணிப்புரையின் பெயரில யாழ்.அரசஅதிபரால் நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின படியே நிவாரணப் பொருள்கள் தரம் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்படுகினறது.

தற்போது நிவாரணப் பொருள்கள் ப.நோ.கூ சங்கங்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டு வருகின்றது. பிரதம களஞ்சியப்பொறுப்பாளர் கதிர்காமநாதன், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி நவரத்தினம், உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஜீவநாதன் ப.நோ.கூ சங்க தலைமைக் காரியாலய பரிசோதகர் தவநாதன், யாழ். ப.நோ.கூ. சங்கம் சார்பில் அன்னராசா ஆகியோரும் ப.நோ.கூ. சங்க உத்தியோகஸ்த்தர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

தரமான உலர் உணவுப் பொருளகள் வழங்கல் நடைபெறுவதை பார்வையிட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமாகிய கமணிபல்லவ ராஜன்(நிஷாந்தன்) களஞ்சியங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இம்மாதம் சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இரண்டு மாத உணவுப் பொருள்கள் வருடப்பிறப்பிற்கு முன் வழங்குவதற்கான ஏற்பாட்டை யாழ்.அரசஅதிபர் செய்துள்ளார். (க)

# பாடசாலைகளில் நினைத்தவாறு பரீட்சைக் கட்டணம் அறவீடு

யாழ்ப்பாணம்,ஏப்.6

பாடசாலைகளில் தவணைப் பரீட்சைக்கான கட்டணங்கள் அறவிடுவதில் இடத்திற்கிடம் ஏற்றத்தாழ்வு காணப்படுவதாகப் புகார் செய்யப்படுகின்றது. அதிபர்கள் தாம் நினைத்தவாறு கட்டணங்களை அறவிட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

சில பாடசாலைகளில் தரம்1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு 7ரூபாவில் இருந்து 20ரூபாவரை பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும் அதேவேளையில், சில பாடசாலைகளில் 15ரூபாவில் இருந்து 35ரூபா வரையும் கட்டணம் அறவிடப்படுகின்றதாம். அதைவிட கணப்பீட்டு அறிக்கைக் கட்டணமும் பெறப்படுகிறது.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தவணைப்பரீட்சைக்கு வலியுறுத்தல் செய்யப்படாமல் இருப்பதால், ஆண்டிறுதிப் பரீட்சைகள் வலய, கோட்ட மட்டத்தில் பொதுப்பரீட்சையாக நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

தவணைப்பரீட்சைக்கான கட்டணங்களின் தொகையையோ தவணைப் பரீட்சைகள் நடத்த வேண்டிய கால அளவையோ வலய-கோட்ட மட்டத்தில் வரையறை செய்யப்பட்டு அறிவுறுத்தப்படாமல் இருப்பதால் பாடசாலைகளில் நினைத்தவாறு மாறுபட்ட நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-11)

### விதை நெல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

நல்லூர் கமநல கேந்திர நிலையத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல் தேவையாயின் உடனடியாக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

### மேலதிக மாகாணப் பணிப்பாளரின் இடமாற்றம் ரத்து

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளைக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவு தற்பொழுது இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதியிலிருந்து வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக கடந்த மாதம் 12ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரனால் 'பக்ஸ்' மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது அவரின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுமாறும் 'பக்ஸ்' மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

### பூநகரி மாணவனுக்கு ஜனாதிபதி சாரணர் விருது

தென்மராட்சி,ஏப்.6

பூநகரி மகா வித்தியாலய மாணவர் ஒருவருக்கு இவ்வருடத்துக்கான ஜனாதிபதி சாரணர் விருது கிடைத்துள்ளது.

வை.கேதீஸ்வரன் என்பவருக்கே ஜனாதிபதி சாரணர் விருது கிடைத்துள்ளது. கிளிநொச்சி, தென்மராட்சி சாரணர் மாவட்ட ஆணையாளரும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளருமான ஐ.செல்வராசாவுக்கு இந்த விருது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-117)

# பங்குனி உத்தரம் முறையாக அநுட்டித்து மங்கல வாழ்வும் நல்வளமும் பெறலாம்

உத்தரம் பன்னிரண்டாவது நட்சத்திரமாகும். பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரம் மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது.

"பலிவிழா பாடல்செய் பங்குனி உத்தர நாள்
ஒளிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்ற வரிகள் திருஞானசம்பந்தக் குழந்தை மயிலை நாயகனைச் சிந்தித்து, வந்தித்து பாடிய பாடலில் வருவனவாகும். இறந்த பெண்ணான பூம்பாவையை மீண்டும் மண்ணில் பிறக்க வைப்பதற்காகவே இப் பாடல் பாடப்பட்டது. மலையத்துவசன் சிவபிரானை வணங்கி "எம் பெருமானே அகிலாண்ட நாயகியைத் திருமணம் செய்து கொள்ளும் திறம் கொண்ட நன்னாள் பங்குனி உத்தர நாளான இந்நாளே" என்று விண்ணப்பித்து அவரின் மணவாளக் கோலங்கண்டு மனமகிழ்ந்த சிறப்பும் பங்குனி உத்தர நாளுக்குண்டு.

**சிவபிரானுக்கு இனியநாள்**

எனவே இந்த நாளைச் சிவபிரானுக்கினிமையான நாளாக எண்ணி விரதம் இருத்தலும் அவனருளால் அவன் தாள் வணங்குவதும் நல்ல பலனைத்தரும் என்பர். இத்தினத்தில் பௌர்ணமியும் சேர்வதால் மிகச் சிறப்பானதாகிறது. அம்மை அப்பரின் உருவங்களைப் பொன்னால் அமைத்து, அபிஷேக ஆராதனைகள் புரிந்து, எழுந்தருளச் செய்து, பூஜை, அர்ச்சனை, தூபதீபம் காட்

## ஞானக் கதிர்

டிக் கிரியைகள் செய்து துதிப்பதும் வழக்கமாகும். அத்துடன் இத்தினத்தில் சுமங்கலிகளான பெண்களை அவர்களின் துணைவர்களோடு இல்லத்திற்கு அழைத்து வந்து மாகேஸ்வர பூசை செய்து, உபகாரம் கொடுத்து மகிழ்வித்தல் பிறவிக்கு பெரும் பயனைத் தருமெனக் கருதப்படுகிறது. மறுநாள்காலையில் விரதத்தை முடித்து வைத்து அற்றார்க்கும் அலர்ந்தார்க்கும் அன்னதானம் கொடுத்து மகிழ்விப்பதும் மரபாக வந்துள்ளது.

இவ்விரதத்தை அநுட்டித்த அலைமகள், அலைகடலில் ஆதிசேஷன் மீது துயிலும் அரியின் மார்பில் வீற்றிருக்கும் தகைமை பெற்றுத் திருமகளானாளென்றும், இந்திரன் இந்திராணியை அடைந்தானென்றும், பிரமன் கலைமகளைத் தன் வாக்கில் ஏற்றிப் போற்றான் என்றும் அறியக் கிடக்கிறது. தேவர்களும் இவ் விரதம் காத்து அனேக பேறுகளைப் பெற்றனர்.

**இவ்விரதப் பலன்**

இத் தினத்தில் விரதம் காத்து, முறைப்படி வழிபடுபவர்கள் சகல இல்லற சம்பத்துக்களையும் பெறுவர் எனலாம். நாயன்மார்களும், முனிவர்களும் கூட இத்திருநாளில் இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றார்களென நம்பப்படுகிறது. திருவாரூர் தியாகேசப் பெருமான் வீதியுலாப் பெருமை என்ற பாடல்களில் இருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பாடல் புலவரின் பங்குனி உத்தப்பரவச உணர்வை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

*"பாரோர் புகழவரும் பங்குனி*
*உத்தரத்தில்*
*ஆரூரின் வீதி அணுகினார் - நேரே*
*பணச்சர்ப்பந் தரித்துப்பொற் பதத்*
*திற் கிண்கிணிச் சத்தம்*
*கிணுக்குக் கிண்கிணுக்*
*கென்னவே."*

பங்குனி உத்தரம் சிறப்போடு, பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளுக்கும் சிறப்புண்டு. இத்தினங்களிலே சுமங்கலிகள் நோன்பிருந்து வழிபாடு இயற்றி அம்மன் ஆலயங்களிலே பொங்கிப் படைத்து, அம்மன் அருள் பெற்று உண்டு மகிழ்வது வழக்கமாகும். கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடையதாக இவ்விரதத்தைக் கூறுபவரும் உண்டு.

எவ்வாறாயினும் பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரம் மற்றும் பங்குனித் திங்களில் விரதம் காப்போர் பொங்கும் புகழுடன் மங்கலமான இல்வாழ்வில் வாழ்வாங்கு வாழ்வர் என்பதே அனுபவத்தின் பால் பெற்ற திருப்தியாகும்.

*"இலர்பலர் ஆகிய காரணம்*
*நோற்பார்*
*சிலர், பலர் நோலா தவர்"*
*- குறள்*

**- நா.க. சண்முகநாதபிள்ளை.**

### விகாரை உடைப்பால் ஆத்திரமடைந்த மக்களை

# சமரசம் செய்வதற்கு முயன்ற அமைச்சர்கள் மீது தாக்குதல்

கொழும்பு,ஏப்.6

புஞ்சிபொரளைச் சந்தி விகாரை இடித்து அழிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சமரசப்படுத்த முயன்ற அமைச்சர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்களைச் சாந்தப்படுத்தி அங்கு அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் சென்ற அமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தாக்குதலில் இருந்து அமைச்சர்களைக் காப்பாற்ற அவர்களது மெய்ப்பாதுகாவலர்கள் பெரும் பிரயத்தனம் செய்தனர். எனினும் அவர்களையும் மீறி அமைச்சர்கள் மீது ஓரிரு அடிகள் விழுந்ததாகக் கூறப்பட்டது.

அங்கு கூடியிருந்த சுமார் 2 ஆயிரம் பேர் அமைச்சர்களைப் பேச விடாது "எங்களுக்கு விளக்கங்கள் தேவை இல்லை; உடைத்த விகாரையை உடனடியாக மீண்டும் கட்டு' என்று கோஷமெழுப்பினர். நிலைமை கட்டுமீறுவதை உணர்ந்த அமைச்சர்கள் இருவரும் உடன் அங்கிருந்து அகன்று சென்றனர். (ம)

# விகாரை தகர்க்கப்பட்டதற்கு அமைச்சர் மங்களவே பொறுப்பு!

## பதவி விலகுமாறு ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு,ஏப்.6

மருதானை புஞ்சிபொரளைச் சந்தியில் அமைந்திருந்த விகாரை உடைத்து அழிக்கப்பட்டதற்கு அமைச்சர் மங்கள சமரவீரவே முழுப் பொறுப்பு. உடனடியாக அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று ஐ.தே.க. கோரிக்கை விடுததுள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றம் கூடியதும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.முகமத் விகாரை தகர்க்கப்பட்டதைக் கண்டித்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

இந்த விகாரை 1922 ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசியின் வருகையை ஒட்டி நிர்மாணிக்கப்பட்டது. வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் அதிகாலை 2.00 மணியளவில் இந்த விகாரையை புல்டோசர் கொண்டு உடைத்துத் தள்ளி இருக்கிறார். இதனை உடனடியாக மீண்டும் நிர்மாணிக்க வேண்டும் - என்றார்.

### இலங்கையிலும் தலிபான்

ஏ.எச்.எம்.அஸ்வர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை தலிபான் ஆகிவிட்டார். மருதானை விகாரையை உடைத்துத் தள்ளியுள்ளார். ஜாவா லேன் பள்ளிவாசலையும் உடைக்கவுள்ளார். இச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அமைச்சர் மங்கள சமரவீர இந்நாட்டில் இன ரீதியான வழிபாட்டுத் தலங்களை அழித்து வருகிறார். அவர் உடன் ராஜினாமா செய்ய வேண்டும். இத்தகைய செயல்கள் இனி இடம்பெறாது என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்த வேண்டும்- என்றார். (ம)

### கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கரவெட்டி கிழவிதோட்டப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறும். (க-10)

### வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி பவள விழா

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பவளவிழாக் கொண்டாட்டங்கள் எதிர்வரும் 20ஆம், 21ஆம், 22 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கல்லூரியில் இருந்து பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதால் இவ்வாறான ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் தங்கள் விவரங்களைத் தற்போதைய முகவரியுடன் எதிர்வரும 12ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு விழாச சபையின் தலைவர் கேட்டுள்ளார். (க-10)

### கட்டுவன் மாதர் சங்கத்தின் மகளிர் தின விழா

யாழ்ப்பாணம்,ஏப்.6

கட்டுவன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர்தின விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலும் சிறப்பு விருந்தினராக இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரைஎங்கரசுவும் கௌரவ விருந்தினராக கட்டுவன் கிராம அலுவலர் கனகசபாபதி கனகநாயகமும் கலந்து கொள்வர்.

மேற்படி விழாவில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (க-6)

# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதல் தேர்வு முடிவுகள்

கொழும்பு,ஏப்.6

பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் 1999ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வெளிவாரிப் பரீட்சையின் கலை முதல் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சித்தியடைந்தோர் வருமாறு:-

கே.அஜந்தா, என்.அஜந்தா, கே.அம்பிகாஜினி, கே.அனுஷா, எஸ்.யாமினி, டி.கலிஸ்டா, ரி.ஹேமலதா, எம்.ஜெயந்தி, டி.ஜீவகலா, எஸ்.ஜெயமதி, ஏ.ஜெயலதா

ஆர்.கஜந்தினி, என்.கஜேந்திரன், எஸ்.கல்பனா, ரி.கமலநாயகி, எஸ்.கமலதாஸன், எஸ்.கேதீஸ்வரி, கே.கிருபாகரன், எஸ்.கோமதி, எஸ்.குருபரன், வை.லதாஜினி

கே.மாலதி, ஏ.மாலினி, ஜே.மங்களேஸ்வரி, எஸ்.மனோரஞ்சனி, வி.மதிவதனா, கே.மோகனதாஸ், என்.நந்தகுமார், என்.நவநீதக்குமரன், என்.நவஞ்ஜன், என்.நவரட்ணம், ஆர்.நிஷாந்தினி

எஸ்.பகீரதன், பி.பத்மவதனி, பி.பிரபாலினி, என்.புவனேஸ்வரி, ரி.ரமஷினி, ஆர்.ரதீபா, ஆர்.சாந்தரூபி, எம்.சசிகுமார், எஸ்.சதீஷ், எஸ்.சத்தியபாமா

வி.செவ்வந்திநாதக்குருக்கள், பி.சிவஞானவேல், எஸ்.சிவகலா, கே.சிவநந்தன், வி.சிவப்பிரகாசம், எஸ்.சோபனா, பி.சிறீபாலன், ரி.சுபாஜினி, எஸ்.சுபாஜினி, எம்.சுபாஜினி

எஸ்.சுமாலினி, எஸ்.சுந்தரேஸ்வரி, எஸ்.சரோஜினி, எம்.சுதாகினி, கே.தாரணி, கே.தருமராசா, எஸ்.தவனேஸ்வரி, எம்.தயாகுமாரன், எம்.தயாலிங்கம், ரி.வசந்தநாதன்

பி.விஷ்ணுபிரியா, கே.விஸ்வநாதன், எஸ்.விதுரன், ஆர்.யாழினி, கே.யாமினி, ரி.யோகாம்பிகை, வி.சுமித்ரா

கே.சிறிஹரன் நூன சித்தியடைந்துள்ளார். (ம)

### ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ் பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

காயத்திரி மந்திர ஜெபம், பண்ணிசை, பஜனை, சொற்பொழிவு என்பன இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

### எரிபொருள் நிலையம் மீண்டும் இயங்கும்

தென்மராட்சி,ஏப்.6

கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் எதிர்வரும் ஒன்பதாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்கவுள்ளது.

டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் ச.யோகராசா அறிவித்துள்ளார். (ம-117)


கடதாசி, மட்டை, தகரம், கண்ணாடி, பிளாஸ்டிக், பொலித்தீன், மரப்பலகை, துணி, ஸ்ரிக்கர் மாபிள் முதலான எப்பொருளிலும் உங்களுக்குத் தேவையான விவரத்தை அச்சடித்துப் பெறக்கூடிய குறைந்த முதலீட்டுப் பிரிண்டிங் முறை எது?

'ஸ்கிறீன் பிரிண்டிங்' முறையிலேயே உலகநாடுகள் எங்கும் அச்சடிக்கப்படுகின்றன. இத் தொழில் அறிவைப் பெற நீங்கள் விரும்புகின்றீர்களா?

*08-04-2001 இல் காலை 9 மணி முதல்*

**ஸ்கிறீன் பிரிண்டிங் கற்றுக் கொள்ளுங்கள்**

குறைந்த முதலீட்டில் கூடிய இலாபம் தரும் கைத்தொழில்.

விவரங்களுக்கு:- **எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்,**

*185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*(வின்சர் தியேட்டர் முன்பாக)*

**பயிற்சி கட்டணம் 2000 ரூபா மட்டும்**

*முக்கிய குறிப்பு:-*

எம்மிடம் பயிற்சி பெற்ற பிரபல அச்சக உரிமையாளர்களுக்கும், புதிதாகத் தொடங்கவிருக்கும் பயிற்சி பெற்றவர்களுக்குமான அறிவித்தல், உங்களுக்குத் தேவையான பொருள்களின் அளவு பற்றிய விவரங்களை 10-04-2001 இற்கு முன்பாக எமக்கு அறியத்தரவும். (86296)



**ஸ்ரீ சஞ்ஜீவா சைவ உணவகம்**

பரமேஸ்வராச் சந்தி.



அன்புடையீர்!

இதுவரை காலமும் சஞ்ஜீவ விலாஸ் என்னும் பெயரில் இயங்கிவந்த எமது சைவ உணவகம் இன்று முதல்

**ஸ்ரீ சஞ்ஜீவா சைவ உணவகம்**

என்னும் பெயருடன் சஞ்ஜீவநாதன் ஆஞ்சநேயரின் அருளாசியுடன், புதுப்பொலிவு பெற்று அனைவரின் மனங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு, சிற்றுண்டி வகைகளையும், ருசிமிக்க குளிர்பான வகைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிட விசாலமான இடவசதியுடன் மங்களகரமாக ஆரம்பிக்கின்றோம் என்பதனை அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

*குறிப்பு:* எம்மிடம் சகல வைபவங்களுக்கும் தேவையான உணவு, சிற்றுண்டி வகைகளை ஓடர் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

"உங்கள் திருப்தியே எங்கள் சேவை"

*பரமேஸ்வராச்சந்தி,*
*திருநெல்வேலி.*

(86261)

உரிமையாளர்:
**க.செல்வநாயகம்.**



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை அதிபர்

**திரு. நீலகண்டன் விஜயகுமார் அவர்கள்**

Eng.(Trd) B.A., S.L.P.S. 2-1

இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று பல்லாண்டு சிறப்புடன் பாரினில் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்,
யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலை.

(86302)



**வெளி வந்துவிட்டது**

நவாலியூர் புகழ் K.சுப்பிரமணியத்தின்
*'மனையடி சிற்ப சிந்தாமணி'*

1. வீடு அமைத்தல்
2. செவ்வாய்த் தோச விளக்கம்
3. இரத்தினக்கல் பதித்தல்

**ஆகிய விளக்கங்களுடன் விலை 150/- மட்டுமே.**

தொடர்பு:-

K.சுப்பிரமணியம் (சோதிடர்)
'ரவிமதி'
கட்டப்பிராய் வட்டக்குளம் அருகில்

(86297)


## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம் பராசக்தி

காளிகோயிலடி சங்கானையைச் சேர்ந்த திருமதி சுந்தரம் பராசக்தி கடந்த (29-03-2001) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும், அமரர் இராமலிங்கம் சுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்ப, சுப்பிரமணியம், வடிவேலு ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வேலுப்பிள்ளை, பாலகிருஷ்ணன் (துபாய்), யோகேஸ்வரன் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி, சறோஜினிதேவி (லண்டன்), பத்மாவதி, பத்மநாயகி (லண்டன்), தனபாலசிங்கம் (லண்டன்), சுபாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, மங்களராணி (ஜேர்மனி), நஜீமா (துபாய்), சுபத்ரா (லண்டன்), மகாலிங்கம், மகேந்திரம் (லண்டன்), கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரம் (லண்டன்), கணேசரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவளக்கொடி, தங்கரத்தினம், அமரர் தவமணி, கதிரவேலு ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகிர்தா, சுதாகர், நிஷாந்தன், கமலினி, தாட்சாயினி, சுங்காசுதன், விதுஷன், கஜனாத், அமிர்தாஜினி, சிந்தாஜினி, மேகலா, விஷ்ணுவர்த்தன், பவித்திரா, ஆபிஷா, திவானி, சுபாங்கி, சஹானா, சரன், சாமினா, கோகுலகிருஷ்ணன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07-04-2001) சனிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு (இல.நே.) லண்டனில் நடைபெறும். இது தொடர்பான துயர் பகிர்வு நிகழ்வுகள் அன்னாரது சங்கானை இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*காளி கோயிலடி,*
*சங்கானை.*

(86267)

தகவல்:
**சு.வேலுப்பிள்ளை**
(மகன்)

உ
கணபதி துணை

# யாழ்.வண்ணை சித்தி புத்தி சமேத ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்

## (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்)

## புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

## காலால் உதைத்த சிப்பாயை பன்றி தாக்கிக் கொன்ற புதுமை

ஆலயங்கள் எமது பண்பாட்டின் நிலைகளனாக விளங்குபவை. "வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு" எமக்குக் காலங்காலமாக ஆலயங்கள் நெறிப்படுத்தி வந்துள்ளன. ஈழத் திருநாட்டிலே ஆங்காங்கே கிராமங்கள் தோறும் கோயில்கள் எழுந்து மக்களின் ஆன்மீக வாழ்வு சிறக்கப் பெருஞ் சாதனை புரிந்து வந்துள்ளன. எனவே எமது பிரதேச சமய வரலாற்றை நாம் ஆராய்ந்து கொள்வதற்கு ஆலயங்களின் வரலாறுகள் சிறந்த பின்னணியாக அமைகின்றன.

எமது ஆலயத்தின் அத்திவாரம் எக்காலத்தைச் சேர்ந்தது என்பது திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டு வந்த கதை, ஒரு நாள் ஒரு போர்த்துக்கேயச் சிப்பாய் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் வரும் வழியில் இப்பிள்ளையாரை ஒரு பக்தர் பிரப்பங்குளக்கரையில் மரநிழலில் வைத்து வணங்கிக்கொண்டு இருந்த வேளையில் ஆவேசம் அடைந்து அச்சிலையைத் தனது சப்பாத்துக் காலால் உதைத்த போது அருகில் உள்ள வயலில் இருந்த ஒரு பன்றி அச்சிப்பாயை குற்றிக் கொன்றுவிட்டதாம். இதன் காரணமாகவே இக்கோயிலுக்குப் "பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்" என்ற காரணப் பெயர் மக்களால் அக்காலத்தில் சூட்டப்பட்டது என்று வரலாறு கூறுகின்றது.

பின்பு ஒல்லாந்தர் காலத்தில் இக்கோயிலை விஸ்தரிக்கும் நோக்கில் இப்பகுதியில் வாழ்ந்து வந்த சில அந்தணர்களும் பொதுமக்களும் சேர்ந்து ஒரு பெரியாரான அகிலேசஐயர் கணேச ஐயர் 1794ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி எழுதிய தர்மசாசனம் தனது பெயரில் "தோம்பில்" பதியப்பட்ட 8 1/2 பரப்பு பன்றிக்கோட்டு வளவை நன்கொடையாகக் கொடுப்பதாகவும் ஒரு தர்மசாசனமாகவும் அத்தோடு இவ்வாதனத்தை ஆண் மரபுவழி மேற்பார்வை செய்தும் பராமரித்தும் வரவேண்டும் என்று 'டச்சுப்' பாஷையில் ஓர் உறுதி எழுதப்பட்டது. பின்பு இவ்வுறுதியை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரித் தோம்பில் 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:-


"பன்றிக்கோட்டு" வளவு வண்ணார்பண்ணைப் பிராமணன் கி.அகிலேச கணேசையர் இந்தக் காணி மடப் புண்ணியத்துக்கு விட்டது. நீ இ உ அ நா

யாழ்ப்பாணக் கச்சேரி

22 டிசம்பர் 1822.

இக்கோயில் அகிலேசஐயர், கணேச ஐயர், வம்சாவளிப் பிராமணர்களால் நிர்வகித்து வந்து கடைசியாக ஆண்தோன்றல் வழித்தோன்றலாக துவாதசி மடத்தில் வசித்து வந்த சண்முக ஐயர் பாலசுப்பிரமணிய ஐயர் அவருக்கு உதவியாக இருந்து வந்த ஆறுமுகம் செட்டியாருக்கும் கந்தப்பசேகர ம் செட்டியாருக்கும் பன்னிருவர் கொண்ட பரிபாலன சபை சட்டப்படி இல. 6385 25-05-1951இல் பிரசித்த நொத்தாரிசு திரு.க.ஐயாத்துரை உறுதி முடித்து சகல ஆதனங்களையும், பொறுப்புக்களையும் ஆலயத்தையும் இவ்வுறுதியில் குறிக்கப்பட்ட கருத்துக்களுக்கு அமைய இவற்றைப் பரிபாலித்து வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகக் காலத்திற்குக் காலம் தர்மகர்த்தாக்களை நியமித்துச் சபை சீராக நடைபெறுகின்றது. இவ்வாலயம் இப்போது பாலஸ்தாபனத்துடன் புதுப்பொலிவுற்று எம் பெருமானாகிய விநாயகருக்குக் கும்பாபிஷேகம் இன்று (06-04-2001) வெள்ளிக்கிழமை இனிதே நிகழத் திருவருள் பாலித்துள்ளமை யாம் செய்த தவப்பயனேயாகும்.

**வீ.எஸ்.இராமநாதர்,**
*தலைவர்,*
*தர்மகர்த்தா சபை.*



## நல்லைக் குருவின் அருளாசி

**வி**நாயகர் அடியார்களே!

யாழ்ப்பாணம் பன்றிக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது மனதுக்கு நிறைவைத் தருகின்றது. சிவபூமி என விளங்கும் ஈழமணித் திருநாட்டில் வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்கள் இந்நாட்டில் உண்டு. இவ்வகையில் யாழ்ப்பாணத்திலும் தெய்வீக உணர்வோடு மக்கள் வாழ்வதற்கு நம் முன்னவர்கள் பல ஆலயங்களை அமைத்துள்ளனர். இவ்வகையில் பழமையும் பெருமையும் வாய்ந்த வண்ணை நகரில் பன்றிக்கோட்டு விநாயகர் ஆலயம் பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகத்தை இன்று காண்பது சைவ மக்களின் இறை சிந்தையை மேம்படுத்துவதற்கும் தர்மம் செய்து வாழ்வதற்கும் வழி அமைத்துள்ளது. விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமான் தனது அடி வழிபடும் அடியவர்கள் துயரைக் களைந்து நல்வாழ்வு கொடுக்க வல்லவர். வேண்டுவார் வேண்டும் பொருட்டு இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை அனைவரும் தரிசனம் செய்து புண்ணியத்துக்கு ஆளாவோமாக!

இவ்வாலயத்தைப் பராமரித்துவரும் அறங்காவலருக்கும் கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரியார்களுக்கும் இவ்வூர் மக்களுக்கும் இறைவன் அருள் புரிய வேண்டுகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசார்ய ஸ்வாமிகள்,**
*2ஆவது குருமஹா சந்நிதானம்.*

## கண்கண்ட தெய்வம் விநாயகர்

**யா**ழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியிற் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீ விசுவலிங்க மகா கணபதிக்கு 06.04.2001 அன்று நிகழும் மகாகும்பாபிஷேக வைபவத்தைக் காணும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை யாம் செய்த தவப்பேறேயாகும். விநாயகர் பிரணவ வடிவத்தினர். அப்பெருமானுக்கு வழிபாடியற்றி அவரது அருள் பெற்றதன் பின்னரே அனைத்துக் கருமங்களையும் நாம் மேற்கொள்வது மரபாகும். எமக்கு வந்து சேரும் இன்னல்கள், இடையூறுகள் அனைத்தையும் அகற்றி எமக்கு நல்லருள் பாலிக்கும் கண்கண்ட தெய்வமாக விநாயகர் விளங்கும் காரணத்தால் எமது பிரதேசத்தில் ஊர் தோறும் பிள்ளையார் கோயில்கள் எழுந்துள்ளன. அத்தகைய கோயில்களின் வரிசையில் சிறப்புப் பெறுவது பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் என்ற ஐதீகத்துடன் விளங்கும் ஸ்ரீ விசுவலிங்க மகா கணபதி கோயிலாகும்.

இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள விநாயகர் வடிவம் மிகுந்த தெய்வீகப் பொலிவுடன் கூடியது. அன்றாடம் தமது கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் மக்கள் விநாயகரை வணங்கிச் செல்வதற்கேற்ற வகையில் இத்திருக்கோயில் காங்கேசன்துறை பிரதான வீதியில் கம்பீரத் தோற்றத்துடன் காட்சி தருகின்றது. எழில்மிகு சிறிய கோபுரத்துடன் சிறப்புடன் விளங்கும் இக்கோயிலில் உள்மண்டபம் மற்றும் பிரகாரம் ஆகியவற்றுக்கான திருப்பணி வேலைகளை இவ்வாலய அறங்காவற் சபையினர் நிறைவேற்றி இவ்வாலயத்தைப் புதுப்பொலிவு பெறச் செய்துள்ளனர். வர்ண வேலைகளும் நிறைவேறி இக்கோயில் காண்போரது உள்ளங்களைக் கவரும் வண்ணம் பொலிவுடன் திகழ்கின்றது.

வரலாற்றுச் சிறப்பும் தெய்வீக சாந்நித்தியமும் மிகுந்து விளங்கும் இவ்வாலயத்திற் பல வருட இடைவெளிக்குப் பின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதனால் விநாயகப் பெருமானது மூர்த்திகரம் மேலும் சிறக்கின்றது. இத்தகைய திருப்பணி வேலைகளுக்குப் பெரும் பொருள் ஈந்து உதவியவர்களுக்கும் அப்பொருளைக் கொண்டு திருப்பணிகளை நிறைவேற்றிய அறங்காவற் சபையினருக்கும் மற்றும் அடியார்களுக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் திருவருட் பேறு பொலிவதாகுக!

எமது பிரதேசத்திலும் உலகெங்கணும் வாழும் மக்கள் அனைவரும் அன்புடனும் சாந்தியுடனும் சகல வளத்துடனும் இனிதே வாழ இக்கும்பாபிஷேக நன்நாளில் விநாயகரைப் போற்றித் துதிப்போமாக!

**பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
*தலைவர், இந்துநாகரிகத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## பிரதிஷ்டா குருவின் ஆசி

**ஈழ**வள நாட்டின் சிரசு எனத் திகழும் யாழ்ப்பாணப் புண்ணிய பூமியிற் பிரசித்தி பெற்ற வண்ணையம்பதிப் பன்றிக்கோட்டு அருள்மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மஹாகணபதி ஆலயத்தில் ஓங்கார சொரூபமாகிய விநாயகப் பெருமானுக்கும், சிவலிங்கத்திற்கும் சித்தி புத்தி சமேத எழுந்தருளி விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஆலய தர்மகர்த்தாச் சபையினரதும் விநாயகர் அடியார்களினதும் பெருமுயற்சியினால் புனராவர்த்தன மகாகும்பாபிஷேக பெருங்குடமுழுக்கு நடைபெறுகின்றது.

வெகு சிறப்பாக நடைபெறுகின்ற இக்கும்பாபிஷேகத்தின் பயனாக விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரது அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்ட வேண்டுமென அப்பெருமானைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகள் பல கூறுகின்றேன்.

'சர்வே ஜனாஹா சுகினோபவந்து'

**சிவஸ்ரீ க.ரவீந்திரக்குருக்கள்,**
*தேவஸ்தான பிரதம குரு.*

## அரச அதிபரின் செய்தி

**16ஆம்**, 17ஆம் நூற்றாண்டுகளில் வண்ணார்பண்ணைப் பகுதியில் இந்து ஆலயங்களின் புகழ் ஓங்கியிருந்தது. அந்நியர் ஆட்சி புரிந்த காலமது. மக்கள் சனத்தொகை இந்தக் காலத்தைப் போல் இல்லாது மிகக் குறைவாகவே இருந்த காலமது. ஆனால் யாவரும் சைவ சமய அபிமானிகளாய், ஆசாரசீலர்களாய் இருந்த காலமது. அந்நியரிடத்து இந்துமத, இந்து ஆலய வெறுப்புணர்வு நாளடைவில் பெரிதாக உருவெடுத்தது. ஆனாலும் கூட இந்து மத அனுட்டானங்கள் கோயில்களிலும், உற்சவங்களிலும் மற்றும் தினசரிப் பூசைகளிலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. பன்றிக்கோட்டுப் பிள்ளையார் என்று வழங்கப்படும் ஆலயம் வண்ணார் பண்ணையில் பிரபல்யம் பெற்றிருந்தது. கோயிலை இடிக்க வந்த அந்நியன் ஒருவன் பன்றியாற் கொல்லப்பட்ட அன்று முதல் இவ்வாலயம் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றது. மாதச் சதுர்த்திப் பூசை, பெருங்கதைப் பூசை முதலியன இவ்வாலயத்தில் இன்றுவரை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அயலில் உள்ளவர்களின் ஆதரவில் இவ்வாலயம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இக்கோயில் சிறிய கோயிலாக இருந்தாலும் மிகக் கீர்த்தி உள்ள கோயிலாக இன்று வரை இருந்து வருகின்றது. இக்கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறப் போவதை அறிந்து மிகவும் சந்தோஷம் அடைந்தேன். கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க.சண்முகநாதன்,**
*அரச அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*

## எமது நன்றிகள்.

**ஈழ**வளத் திருநாட்டின் வடபால் உள்ள யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள பன்றிக்கோட்டுப் பிள்ளையார் என அழைக்கப்படும் ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில் பழமையும் பல்லோர் வழிபட்ட நலமும் உடையது.

இத்திருக்கோயிற் திருப்பணிகள் அன்பர் பலருடைய முயற்சியால் இனிது நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நிகழ்வது அனைவரும் அறிந்தது. மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள்.

எமது நாட்டிலே சாந்தி, சமாதானம், அமைதி யாவும் மலர்ந்து சகல மக்களும் சந்தோஷமாக வாழ சித்தி புத்தி சமேத விநாயகப் பெருமானின் கிருபை கிடைக்க வேண்டும் என்றும், இக்கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற ஜோதி சொருபனனான சர்வ விக்கினங்களையும் தீர்த்தருளும் விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**வி.மாணிக்கம்,**
*உப செயலாளர்.*

## ஆதரித்தே அருள் தரும் வாரணன்

**சை**வத் தமிழ் வளரும் யாழ்.வண்ணையம்பதியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் விஸ்வலிங்கப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது யாவருக்கும் நன்மை தருவதாகும். கருணைதரு யானை முகத்திலிருந்து வரும் மதம் பொழிவை உண்ண வட்டமிடும் வண்டுகளின் இயல்பான ரீங்காரத்தைக் கேட்டு சங்கீதமாக ரசித்து அவ்வண்டுகட்கு நல்லருள் தருபவராவார் விநாயகர் என்று 'தியான மாலையில்' கூறப்படுகிறது. அவ்விளகிய அருட்பொலிவுடைய விநாயகருக்கு ஆலயம் புதுப்பித்து சிவப்பணிபுரிந்த சபையினர்கள், நிதி வழங்கியவர்கள், அடியார்கள் அனைவரும் நல்லருளுக்காளாவர். ஆலய சபையினர், பிரதம சிவாச்சாரியார், பக்தர் குழாம் எல்லோருக்கும் இத்திருக்குட நீராட்டுக் காட்சி சகல நன்மைகளும் தர துதிசெய்து விழா இனிதுற வணங்கி வாழ்த்துகிறோம்.

'சுபம்'

**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்,**
*ஸ்ரீ கதிரைமலைச் சிவன் தேவஸ்தானம்,*
*சுன்னாகம்.*

## முழு நிலா நாள் கருத்தரங்கு

கருப்பொருள்:- "உலக மயமாக்கலில் குடும்பம்"
கருத்துரை வழங்குபவர்:- அருட்திரு. C.G. ஜெயக்குமார்
(M.A.SOCIOLOGY)

காலம்:- நாளை (07-04-2001) சனிக்கிழமை
நேரம்:- 3.30 (இ.நே.)
இடம்:- "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

*இதில் கலந்து பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

(86273) - இயக்குநர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 - 10 - 1920 | 02 - 04 - 2000 |

திருமதி
### செல்வரட்னம் இரத்தினாம்பிகை (J.P)

ஆண்டு ஒன்று அகன்றது அம்மையே!
நீண்ட நினைவுகள் நிலைத்து நிற்குது!
மாண்ட உங்கள் ஆத்ம தரிசனம்!
வேண்டி உம்பாதம் வணங்கி நிற்கிறோம்.

தகவல்:
*செ.லிங்கேஸ்வரன்,*
*மாதகல் கிழக்கு,*
*மாதகல்.*

உங்கள் பிரிவால் துயருறும்
**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**
(86263)

## நிவாரண விநியோகம்

அரியாலை,ஏப்.6

இடம்பெயர்ந்தோருக்கான 89 ஆவது கட்ட நிவாரண விநியோகத்தை யாழ். ப.நோ.கூ. சங்கம் ஆரம்பித்துள ளது. நாட்டரிசி, சீனி, மைசூர்பருப்பு, பாம்பா என்பன நிவாரணத்துக்கு வழங் கப்பட்டு வருகின்றன. (ஐ-17)

**POST OF CLERK**
**(Ad - hoc basis)**
**Health service Unit**

Applications are inivited to the Post of Clerk (Ad - hoc basis) for the above unit.

The applicant should be young energetic and able to organize and arrange classes in addition to office work Ability to travel outside the University, but within the town limits is essential.

Applicants should be proficient in typing in English and ability to use a computer is essential.

Applicants should be send their applications in their own handwriting (in English) to


**The Co - Ordinator,**
**Health service Unit,**
**Faculty of Medicine,**
**Jaffna.**

Closing date for applications **11.04.2001**

**Registrar,**
University of Jaffna.

(சி16086)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| இகம் | பரம் |
|---|---|
| 27 - 07 - 1957 | 07 - 03 - 2001 |

அமரர்
### நல்லதம்பி விக்னேஸ்வரன் (செட்டி)

"அன்பு மனைவியும் ஆசை மகனும்
பாசமிகு தாயாரும் நேச நெஞ்சங்களும்
பாரினில் பரிதவித்து நிற்கையிலே,
காலன் உனைக் கவர்ந்ததேனோ?"

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் ந. விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த 07. 03. 2001 புதன்கிழமை இயற்கையெய்தினார். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு உதவிகள் புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் மற்றும் நேரிலும், தொலைபேசி, தந்தி, தபால் மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (06. 04. 2001) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

*மணியர்பதி வீதி,*
*கொக்குவில்.*
(85894)

பிரிவால் துயருறும்:
**மனைவி, மகன்.**


## அதே 'கூல்' விலையில், அதே 'கூல்' பியர்.




**வெயில் எறிக்கும் வேளையில் உள்ளம்
குளிரவைக்கும் விலையில் பியர்
கிடைக்காவிட்டால் என்ன பயன்?**

எமது வாடிக்கையாளர்களின் விசேட நன்மை கருதி வெளியிடப்படுகிறது.

விநியோகஸ்தர்கள்:-
**வாமாஸ் வைன் ஸ்ரோர்ஸ்**
**56/7, 56/8, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி16033)

ஓம் சக்தி
ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை துணை

# கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்

## நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

## 06-04-2001

## ஆதீன முதல்வரின் அருளாசி

கோண்டாவில் கிழக்கில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். நீர்வளமும் நிலவளமும் கொண்ட கோண்டாவில் பதியில் சைவத்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குகின்ற ஆலயங்களில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு சர்வ உலகுக்கும் தாயாக இருக்கும் அன்னை இந்த ஆலயத்தில் நாகபூஷணியாக எழுந்தருளியிருந்து அடியவர்களின் நாகதோஷங்களை நீக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அருள் புரிகின்றாள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மஹாகும்பாபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டு உள்ளத்தில் இறைவன் திருவுருவத்தை அமர்த்தி தர்மமும் நீதியும் தெய்வ நம்பிக்கையும் கொண்டு வாழ்வதற்கு இப் பிறவியின் பயனை அனுபவித்து இறை இன்பத்தை நுகர்வோமாக.

அனைத்து அடியார்களும் கும்பாபிஷேகத்தைத் தரிசிக்க இறைவனை வேண்டுகின்றோம். ஆலய பரிபாலனசபையினருக்கும் கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரியார்களுக்கும் கோண்டாவில் வாழ் மக்களுக்கும் இறை ஆசி கிட்டுவதாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி**
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.



## பிரதம குருவின் ஆசி

ஆலயங்கள் ஆன்மீகம் வளரும் அறநிலையங்களாகும். தேவர்கள் வந்து உறையும் இடம் என்பதால் தேவஸ்தானம் என்று சிறப்புப் பெயர் பெறுகின்றது. தேவியின் அருள் ஒளி அங்கு எப்பொழுதும் பிரகாசிக்கும்.

உலகம் முழுவதும் சூரியனின் ஒளி பரவினாலும் சூரிய ஒளியிலிருந்து நெருப்பினை நாம் நேரடியாகப் பெறமுடியாது. சூரிய காந்தக் கல் எனும் ஒரு வில்லையைப் பயன்படுத்தித்தான் நெருப்பினைப் பெறமுடியும். அதேபோல் இறைவனின் திருவருள் எல்லா இடமும் பரவி இருந்தாலும் அத்திருவருளை ஓர் இடத்தில் குவித்துத் தரும் புனித இடங்களாக திருக்கோயில்களே விளங்குகின்றன. அத்திருக்கோயில்களில் திருவருள் என்னும் பயிர்வளர அபிஷேகங்கள், ஆராதனைகள் அவசியமானவை.

ஆகம முறைப்படி அமைக்கப் பெற்ற ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்திக்கிரியைகள் மூலமே திருவருளை நிலைநிறுத்தும் பெரும் பணியைச் செய்ய முடியும்.

கும்பாபிஷேகப் பணியைச் செய்பவர்களும் செய்விப்பவர்களும் கும்பாபிஷேகத்தைச் செய்ய எல்லா வகைகளிலும் உதவியவர்களும் ஆன்மீக நெறியில் தங்களையும் வளர்த்து, ஏனையவர்களையும் வளர்க்கும் இப் பெரும் புனிதப் பணிக்கு தங்களை அர்ப்பணித்த பெருமைக்குரியவர்களாவார்கள். கோண்டாவில் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத் திருப்பணியில் ஈடுபட்ட நிர்வாகிகள், அன்பர்கள், அவ்வூர் அடியார்கள் அனைவரும் அம்பிகையின் ஈடிணையிலாப் பேரருள்பெற்று பெரும் பயன் அடைந்து பல்லாண்டு காலம் நீடூழி வாழியவே! என ஆசி வழங்குகிறோம்.

'பிரதிஷ்டா திலகம்'
**பிரதம குரு**
**பிரம்மஸ்ரீ சாமி ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள்,**
கோண்டாவில் மேற்கு.

# நாடிவரும் அடியார் வினைபோக்கிடும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன் கருணையால் பூலோகத்தில் வாழ்கின்ற அடியார்களின் குறைகளைப் போக்குவதற்காக அன்னை பராசக்தி பல மகா சக்திகளாகத் தோன்றியருள்கின்றாள்.

அடியார்கள் எந்தெந்த ரூபத்தில் தேவியை நினைத்து வழிபடுகின்றார்களோ அவள் அந்தந்த ரூபத்தில் தோன்றி அருள் கொடுக்கின்றாள். இதற்கமைய கோண்டாவில் கிழக்குப்பகுதியில் வாழுகின்ற அன்பர்கள் புற்றிலுள்ள நாகபாம்பையும் புற்றின் மத்தியில் தோன்றியுள்ள அம்மன் சொரூபத்தையும் இணைத்து ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் என்ற பெயரில் பயபக்தியோடு வணங்கி வருகின்றார்கள்.

### வரலாற்றுச் சிறப்பு

அந்த அன்னையின் வரலாற்றையும் அற்புதச்சிறப்பையும் நோக்குமிடத்து இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் நாகப்பரின் காணியில் ஒரு வில்வ மரமும் பிரண்நாரி என்ற கொடியும் ஒருங்கே நின்றனவாம். அக்கொடி வில்வமரத்தைச் சுற்றி மஹோற்சவ காலத்தில் ஸ்தம்பத்தில் கொடிச் சீலை சுற்றியிருப்பதைப் போல் காட்சி கொடுத்தனவாம்.

சிறிது காலத்தின் பின் வில்வமரத்தடியில் ஆலய ஸ்தூபி வடிவத்தில் கறையான் புற்று வந்துள்ளதைக் கண்டார்கள். அப்புற்றில் நாகதேவன் குடிகொண்டிருப்பதை யாரும் அறியார். பின்னர் அவ்வழியால் சென்ற சிலர் நாகத்தின் தரிசனத்தைக் கண்டார்கள். உடனே காணிச் சொந்தக்காரரின் உதவியுடன் அவ்விடத்தைத் துப்புரவு செய்து இலை குழைகளினால் பந்தல் போட்டு, சாணியினால் மெழுகி, பயபக்தியுடன் பால், பழம் கரைத்து வைத்து வழிபாடு செய்து வந்தார்கள்.

### அம்பாளின் அற்புதம்

அடியார்களின் வழிபாடு சிறப்படையும் போது புற்றின் மத்தியில் அம்பாளின் அலங்கார சொரூபம் மக்களுக்குக் காட்சியளிக்கத் தொடங்கியது. இப்புற்று காற்று, மழை காலங்களில் கூடக் கரையாமல் வில்வமரக்கிளைகள் பாதுகாத்து வந்தன.

சில அடியார்களுக்குக் கனவில் தோன்றி, "நான் நாகசக்தியாக உள்ளேன். எனக்கு ஒரு சாலை அமைத்து வழிபட்டு வாருங்கள். உங்களை நலமுடனும் சிறப்புடனும் வாழ வைப்பேன்" என்று கூறி அருளினார்.

உடனே சின்னப்பர் விதானையாரின் காலத்தில் அவ்விடத்தில் புண்ணிய ஸ்தலமாக்க வேண்டும் என்ற ஆசையினால் அடியார்களின் உதவியுடன் கொட்டிலமைப்பு, வீரசைவ அர்ச்சகரான கிருஷ்ண ஐயாவைக் கொண்டு பூஜை ஆராதனைகள் செய்வித்து வந்தார்கள்.

### நோய்க்கு மருந்து

அவ்வேளையில் அக்கிராமத்தில் அம்மன் நோய் பரவத் தொடங்கியது. நம்பிக்கையுள்ள அடியார்கள் சிலர் புற்றிலுள்ள மண்ணையும் விபூதியையும் சேர்த்துத் தங்கள் மேனி மேல் பூசிக் கொண்டதும் ஓரிரு தினங்களில் அந் நோய் அகன்றதும் உண்மை. அதற்குப் பின் அம்பாளும் நாகமும் ஒருங்கே அமைந்துள்ளது என்பதை உணர்ந்து கொண்டு அவ்விடத்தில் கோயிலமைத்து ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் என்று பெயர் சூட்டி அலங்காரத் திருவிழா செய்து வழிபட்டு வந்தார்கள்.

சொற்ப காலத்துக்குள் அம்பாளின் அளவற்ற கிருபையால் அடியார்களின் சந்ததியினர் கல்வி கற்றுப் பல தரப்பட்ட உத்தியோகங்களையும் பெற்றுச் செல்வச் செழிப்புடன் விளங்கினார்கள்.

மெய்யடியார்கள் பலரும் சேர்ந்து மேலும் ஆலயத்தை வேதாகம முறைப்படி கட்டி மஹோற்சவம் செய்ய வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு சின்னப்பர் விதானையாரின் ஆசியுடனும் மக்களின் பேருதவியுடனும் இரத்தினசிங்க விதானையாரின் தலைமையில் கோயில் கட்டப்பட்டது.

கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபா மண்டபம், ஸ்தம்ப மண்டபம் போன்றவை அழகாக அமைக்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் (25-30 ஆண்டுகளுக்கு முன்) மகா கும்பாபிஷேகம் நடைபெற்று மஹோற்சவம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

### அம்பிகையின் அருள்

அம்பாள் செய்த அற்புதங்களோ எத்தனை! எத்தனை! சொல்ல முடியாதவைகள். அடியார்கள் துன்பக் கடலிலே தத்தளிக்கும் போது அம்பாளின் கிருபையைத் தேடி ஓடோடி வந்து தங்கள் குறைகளைச் சொல்லி அழுகின்ற நேரத்தில் அவர்களின் இடர்களை பனிபோல் நீக்கி அருள் புரிகின்றார்.

அம்பாளின் விசேட காலங்களில் உள்வீதியிலே சிலம்புச் சத்தம் 'கலீர் கலீர்' என்று ஒலிப்பதைக் கேட்கக் கூடியதாக இருக்கும். அதே இடத்தைச் சேர்ந்த நாகம்மா என்பவர், அம்பாளிடம் அளவற்ற அன்பு கொண்டவராக இருந்தார்.

ஒரு நாள் திடீரென இவருக்கு ஏற்பட்ட உடல் சுகயீனத்தால் அம்பாளின் தொண்டுகளைச் செய்ய முடியவில்லை. அதனால் மனம் புண்பட்ட நிலையில் வைத்தியர்களின் உதவியை நாடி மருந்து மாத்திரைகளை சாப்பிட்டு வந்தார். அவரின் வருத்தம் குணமடையவில்லை; அம்பாளை நொந்து அழுது புலம்பினார்.

அன்னை கனவிலே தோன்றி 'என் வீபூதியும் மண்ணும் இருக்கும் போது உனக்கு ஏன் மருந்து?' என்று கூறி மறைந்தார். அம்மூதாட்டி கடுமையாக யோசித்த பின் எனக்கு மருந்து என் அன்னையிடம் தான் உள்ளதென்பதை உணர்ந்து உற்றாரை ஆலயக்குருக்களிடம் அனுப்பி வீபூதியும் மண்ணும் வாங்கி வந்து சிறிதை வாயில் போட்டு விட்டு மிகுதியை உடலில் பூசிக்கொண்டார்.

இரு தினங்களில் அவரின் நோய் பஞ்சாய்ப் பறந்தது. தற்போது நோயுற்று வரும் அடியார்களுக்கு வீபூதியும் மண்ணும் மருந்தாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

### அருள் சுரக்கும் அன்னை

'மழலைச் செல்வம் இல்லாதவர்கள், மாங்கல்யம் கிடைக்காத கன்னியர்கள் தாயிடம் வந்து நாகசாந்தி செய்து அல்லது நாகதோஷ அர்ச்சனை செய்து தாங்கள் விரும்பும் வரத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

ஒரு முறை அர்ச்சகர் உறவினர் வீட்டில் நித்திரையில் இருக்கும் போது ஒரு கிழவி வந்து, அதிகாலை மூன்று மணிக்கு அடித்து எழுப்பி கோயில் திறப்பையும் கையில் கொடுத்து 'போடா உன் பணியைச் செய்' என்றதும் எழுந்து பார்த்தார். மூதாட்டியைக் காணவில்லை.

உடனே அர்ச்சகர் நீராடி விட்டு ஆலய பூஜையை முடித்தார்.

**மஹா கும்பாபிஷேகம்**
***இன்று (06-04-2001) வெள்ளிக்கிழமை காலை 9.43 மணிமுதல் 10.27 மணிக்குள் வரும் சுப முகூர்த்தத்தில் நடைபெறும்.***

பின்னர் அந்த வீட்டு உறவினர் ஒருவருக்கு வைத்தியசாலையில் குழந்தை பிறந்திருந்தது தெரியவந்தது.

அப்போதுதான் அர்ச்சகர், தான் துடக்கு வீட்டில் இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் அன்னை இப்படிச் செய்தார் என்பதை உணர்ந்து கொண்டார்.

### நேரில் வந்த அம்பிகை

சில வருடங்களுக்கு முன் அதிகாலை 4.30 மணிக்கு கண்டாமணி அடிப்பது வழக்கம். ஒரு நாள் அர்ச்சகர் கண்டாமணியை அடித்து விட்டுக் கோபுர வாசலில் வந்ததும் வெள்ளைச் சேலையுடன் நடுத்தர பெண் ஒருவர் வந்து, 'அந்த வீதியில் செத்த வீடு தெரியுமோ?' என்று கேட்டார். பூசகர் 'தெரியாதே' என்று கூறியதும் அவரை வெளிக் கிணற்றடிக்குக் கூட்டிச் சென்று "இந்தப் பக்கம்தான் மரண வீடு" என்று சொன்னார்.

இந்தப் பெண்ணுக்குப் பயித்தியமோ என்று மனதிற்குள் நினைத்தார். அப்பெண்ணின் கையில் வேப்பிலையையும் தீச்சட்டியையும் தலைவிரி கோலத்துடன் கண்டதும் அர்ச்சகர் மெய்மறந்து நின்றார்.

அதன் பின்னர் சுகயீனம் உற்ற சில நாள்கள் இருந்ததும் தாயேன் வந்தார் என்றால் ஆலய சுற்றாடலில் மரணம் சம்பவித்தால் கண்டாமணியை அடிக்கக் கூடாது என்பதை உணர்த்தி அதைத் தடுப்பதற்காகத்தான் என்பதும் தெரியவந்தது.

இவ்வாலயத்தில் குருமார்களாக திரு.சோமசுந்தர ஐயர் திரு. அமிர்தலிங்க ஐயர், திரு.சிவராசா ஐயர் போன்றவர்கள் பூஜை செய்து வந்தார்கள். இவர்களில் சிவராசா ஐயர் அவர்களுக்கு விசேச திருவிழாக் காலங்களில் அம்மன் கலை வருவது வழமையாகி விட்டது.

### மழை ஓய்ந்த மகிமை

பல வருடங்களுக்கு முன் மஹோற்சவத்தில் ஒன்பதாம் நாளாகிய தேர்த் திருவிழா அன்று அம்பாள் ரதத்தில் அமர்ந்து வீதியுலா வருவதற்கு ஆயத்தமாகும் போது திடீரென மழை 'சோ' எனப் பொழியத் தொடங்கியது.

அச்சமயம் பூசகருக்கு கலை வந்ததும் ஓடிப்போய் கர்ப்பக் கிரகத்தில் உள்ள அம்பாள் அணிந்திருந்த பூமாலையைக் கழற்றி வெளியே தேரின் மேல் அமர்ந்திருந்த அம்பாளைப் பார்த்து பூமாலையை விண் நோக்கி எறிந்ததுடன் ஐயர் மயங்கி விழுந்துவிட்டார்.

சற்று நேரத்தின் பின் வர்ண பகவான் (மழை) ஓய்ந்து விட்டதைக் கண்ட அடியார்கள் அன்னையின் அனுக்கிரகத்தை உணர்ந்து 'அரோகரா! அரோகரா!!' என்று ஒலித்த வண்ணம் மெய் மறந்து நின்றார்கள். இது வரலாற்று உண்மை.

சென்ற வருடம் பாலஸ்தாபனம் செய்கின்ற போது விக்னேஸ்வர பூசையின் போது நாகசக்தி நாகமாக மாறி அடியார்களுக்குக் காட்சி கொடுத்தது. தான் புதிதாக அமரப் போகும் மேடைக்குச் சென்று சிறு குழந்தைகள் விளையாட்டுப் பொருள்களைக் கண்டு ஆனந்தம் அடைவது போல் நாகம் ஆடுவதும் ஓடுவதுமாக இருந்ததைக் கண்ட அடியார்கள் காணிக்கை செலுத்தி வணங்கினார்கள்.

### மகா கும்பாபிஷேகம்

இவ்வாலயம் ஊர் மக்களின் உதவியுடனும் ஏனைய அடியார்களின் பங்களிப்புடனும் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டது. கிரிதரன், துரைசிங்கம் ஆகியோரின் தலைமையில் புதிய திருத்த வேலைகள் செய்யப்பட்டு புனராவர்த்தன பிரதிஸ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று (06-04-2001) வெள்ளிக்கிழமை காலை 9.43 மணிமுதல் 10.27 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் நிகழ்கின்றது. பிரம்மஸ்ரீ சிறீஸ்காந்தக் குருக்கள் அவர்களால் நடத்தப்பெறுகின்றது.

அம்பிகை அடியார்கள் பெரும் திரளாக வருகை தந்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**- கே.பீ.இந்திரன் ஐயர்** (ஆலய குரு)

(86244)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 04 - 1914

உதிர்வு 06 - 04 - 2000

## அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு

எமது நிறுவன சக உத்தியோகத்தர்
**திருமதி செ.சித்திரவேலாயுதம்**
அவர்களது அன்புத் தந்தையாரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

பிராந்திய முகாமையாளரும்
சக உத்தியோகத்தர்களும்
வரையறுக்கப்பட்ட
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(86097)



# 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்

அன்னை மடியில் 05 - 01 - 1934



ஆண்டவன் அடியில் 07 - 03 - 2001

## அமரர் நாகமுத்து கந்தையா

திங்கள் ஒன்று சென்றாலும்,
தீயில் நீங்கள் வெந்தாலும்
நெஞ்சம் மறக்குமா உங்கள் நினைவுகளை?
நீங்கள் காட்டிய பாசத்தை அன்பு நேசத்தை - எம்
இதயத் தந்திகள் தினம் தினம் மீட்டும்!
பூசிக்கின்றோம் பக்தியுடன் புனிதனே அடைக.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*நிரந்தர முகவரி:-*
தட்டாங்குளம் றோட்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

*தற்காலிக முகவரி:-*
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்.

(86257)



## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

## *விசேட தள்ளுபடி விற்பனை*

பாபறா, றோயல் கலெக்சன், மக்கரிட்டா மற்றும்
பல துணிவகைகள் 1M -100/=
வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
சாறி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ், சேட்
வகைகள், ரவுஸர் லென்ந் வகைகள் மற்றும்
அனைத்துத் தெரிவுகளுக்கும் ஆடவர் தொடக்கம்
மங்கையர் வரை நாடவேண்டிய இடம்:-

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

திருமணப் பட்டுப் புடைவைகளுக்குப்
பெயர் பெற்ற ஸ்தாபனம்,

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

**இல.14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,**
சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு விசேடமான காட்சிக் கூடம்
இல.17, நவீன சந்தை, மேல்மாடி.

(C/16087)


# 7 ஆண்டுகள் கொழும்பில் தவம்கிடந்த குளிரூட்டும் சாதனங்கள் யாழ்.வந்தன

## பிரிட்டனால் ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டவை

யாழ்ப்பாணம்,ஏப்.6

பிரிட்டிஷ் அரசால் 7 வருடங்களுக்கு முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட குளிரூட்டும் சாதனங்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன.

1994ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து இவை அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. எனினும் குடாநாட்டில் அப்போதைய சூழ்நிலை காரணமாக அவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. தற்போதுதான் அவற்றை யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக உரிய பராமரிப்பு இன்றி கொழும்பில் கிடந்த இவை மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. குளிரூட்டும் சாதனங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மரப் பெட்டிகள் கறையான் அரித்துக் காணப்படுகின்றன.

இந்தக் குளிரூட்டும் சாதனங்களை யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்தில் பொருத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமல் உரிய பராமரிப்புகள் இன்றி வைக்கப்பட்டிருந்த இவை பழுதடைந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இதேவேளை - மேற்படி குளிரூட்டும் சாதனங்களை பொருத்தக்கூடிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் குடாநாட்டில் இல்லை என்றும் -

அவற்றைப் பொருத்தவதற்கு கொழும்பில் இருந்தே தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அழைத்துவரப்பட வேண்டும் என்றும் - வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-6-9-15)

## பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.மாவட்ட நீதிவானின் உத்தரவுப்படி நன்னடத்தைப் பயிற்சிக்காக இருபாலை காணான் சிறுவர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றத்தால் அவனது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

தங்கச் சங்கிலி ஒன்றைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட சிறுவனே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

எதிர்வரும் காலங்களில் இந்தச் சிறுவன் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அதற்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்பட்டு பெற்றோரும் தண்டிக்கப்படுவர் என்ற எச்சரிக்கையுடன் நீதிவான் இ.த.விக்னராஜா சிறுவனைத் தாயாரிடம் ஒப்படைத்தார்.

(ம-6-9)

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வாராந்தம் வழங்கி வரும் திரைப் படக்காட்சித் தொடரில் 'த கில்லிங் பீல்ட்ஸ்' (The Killing Fields) எனும் ஆங்கிலத் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியிற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

கம்போடியாவில் நடைபெற்ற யுத்தத்தின் போது இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் இப்படத்தில் விரிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம் என புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ம-6)

## மாதாந்தக் கொடுப்பனவு

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத்தில் மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுவோர் மற்றும் புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான இம்மாதக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் அந்தந்த தபால் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் தெரிவித்தனர்.

(ம-117)

# கொழும்புத்துறையின் சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி இல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.6

கொழும்புத்துறை கிழக்கு. மேற்கு பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர விருப்பம் தெரிவித்துள்ள போதும் அவர்கள் அங்கு மீளக்குடியமர்வதற்கோ வீடுகளைப் பார்வையிடவோ இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

- இவ்வாறு யாழ்.பிரதேச செயலர் ந.செந்தில்நந்தனன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

கொழும்புத்துறை கிழக்கு ஜே-62 மற்றும் மேற்கு ஜே-63 கிராம அலுவலர் பிரிவுகளில் பொதுமக்கள் மீளக்குடியமரக்கூடிய நிலை காணப்படுகின்றது. பல வீடுகள் சேதம் இன்றி காணப்படுகின்றன. ஆனால் இந்தப் பகுதிக்கு பொதுமக்கள் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

கடற்கரை வீதியை படையினர் தடை செய்து வைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் பிரயாணம் செய்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த வருடம் மே மாதம் கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் மானிப்பாய் மற்றும் சங்கானைப் பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

(ம-6)


## குரும்பசிட்டி - சன்மார்க்க சபை
## ஈழகேசரிச் சிறுகதைகள் அறிமுக விழாவும் படைப்பாளிகள் கௌரவிப்பும்

*இடம்:* இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்.
*காலம்:* 08.04.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
*தலைவர்* : கலைப் பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
வரவேற்புரை
தலைமையுரை
தொகுப்பாசிரியரையும், படைப்பாளிகளையும் கௌரவித்தல்
படைப்பாளிகள் பற்றிய உரை: *செங்கை ஆழியான்*
நூல் மதிப்புரை: *செம்பியன் செல்வன்*
கனகசெந்திநாதன் நினைவுரை: *திருமதி ஆ.சிவஞானசுந்தரம்*
*(அதிபர், இராமநாதன் கல்லூரி)*
நன்றியுரை: *சி.தயாபரன் (எந்திரவியலாளர்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ.பாலகுமார்
*பொதுச்செயலாளர்*

*குரும்பசிட்டி.* (86172)



## புத்தூர் அருள்மிகு காரைக்கூடல் வைரவர் தேவஸ்தான
## வருடாந்த அலங்கார உற்சவம்

ஆரம்பம் :- **இன்று (06.04.2001) வெள்ளிக்கிழமை**
காலை 8 மணி - 12 மணி வரை
பிற்பகல் 1 மணி - 6 மணி வரை
இன்று பங்குனி உத்தர விழாவும் சங்காபிஷேகமும் நடைபெறும்.
தினமும் மாலை 5.30 மணிக்கு
அருள்மிகு வைரவப்பெருமான் திருவீதிஉலா வருதல் நிகழும்.
**17.04.2001 செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா 12 மணிக்கு**
பிரதிஷ்டா வித்தகர் பிரம்மஸ்ரீ வே.நடராசா குருக்கள்
தலைமையில் கிரியைகளும், விழாக்களும் நடைபெறும்.

**காரைக்கூடல் வைரவர் தேவஸ்தானம்**
**அறங்காவலரும் உபயகாரரும்,**
**பொதுமக்களும்.**

(86259)



*புத்தாண்டு தினத்தை முன்னிட்டு* *இன்று முதல்*

# காவேரியில் மாபெரும் மலிவு விற்பனை

# காவேரி சில்க்ஸ் 48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C/16085)

## அடுத்தமாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது

# அரச ஊழியரின் சம்பளத்தில் எழுபது சதவீதம் ஓய்வூதியம்

### நாடாளுமன்றில் அமைச்சர் பத்திரன அறிவிப்பு

கொழும்பு,ஏப்.6

ஓய்வுபெறுவோருக்கு அவர்கள் பெறும் சம்பளத்தின் எழுபது சத வீதம் ஓய்வூதியமாக வழங்கப்படும். ஆயிரம் ரூபா ஊழியம் பெறும் ஒருவர் 700 ரூபாவை ஓய்வூதியமாகப் பெறுவார். அடுத்து மாதம் முதல் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று பொது நிர்வாக, அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன புதன்கிழமை காலை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

தமது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு (குழு நிலை) விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வருடாந்தம் பரீட்சைகள் நடத்தியே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. சகல இடமாற்றங்களும் இடமாற்ற சபையினூடாகவே வழங்கப்படுகின்றன. இதில் அரசியல் தலையீடு இல்லை.

கிராமசேவகர்களுக்கு ஜனவரி முதல் 300ரூபா அலவன்ஸ் வழங்கப்படும். நகரப் பகுதியைச் சேர்ந்த கிராமசேவையாளருக்கு 500 ரூபா அலவன்ஸ் வழங்கப்படும்.

நிர்வாக சேவைப் பரீட்சைக்கு 30 வயதுக்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம். அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிதாக நியமிக்கப்பட்டோருக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**உள்ளூராட்சித் தேர்தல்**

உள்ளூராட்சித் தேர்தல்கள் நேரடி வாக்களிப்பு முறையில் இடம்பெறவேண்டும் என்பதே எமது அபிப்பிராயம். அதற்கேற்ப தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும். இது தொடர்பாக அடுத்த மாதம் 22ஆம் திகதி விவாதம் ஒன்று இடம்பெறும். அதில் எதிர்க்கட்சித்தலைவரும் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும். பிரதேச செயலாளர் அலுவலக வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும். பிரதேச செயலாளர் அலுவலக குறைபாடுகளை அமைச்சு அதிகாரிகள் குழு மேற்பார்வை செய்யும்.

அரச அதிகாரி ஒருவர் பொது மக்களின் வேலைகளை உரிய காலத்தில் நிறைவேற்றாமல் தாமதித்தாரானால் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த அலுவலை மக்கள் நிறை வேற்றிக் கொள்ள பல விண்ணப்பப்படிவங்களை நிரப்ப வேண்டியுள்ளது. தேவையற்ற படிவங்கள் நீக்கப்படும். ஈமெயில் மூலம் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும். ஓய்வூதியத் திணைக்களத்தில் தாமதம் காணப்படுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (க)

## கும்பாபிஷேகம்

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் சங்காபிஷேகமும் பரிவார மூர்த்தி விநாயகர் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகமும் எதிர்வரும் ஞாயிறன்று காலை 5 மணி முதல் நடைபெறவுள்ளன. கும்பாபிஷேக கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன. நாளை சனிக்கிழமை காலை 7மணி முதல் பிற்பகல் 3மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (ஐ)



**சங்கானை உருத்திரா சனசமூக நிலையத்தில் கடந்த மாதம் போஷாக்குத் தொடர்பான கண்காட்சி இடம்பெற்றது.**

**மூளாய் சிறுவர் ஆரம்பப் பள்ளி நிறுவுநரும் ஜீ.ரீ.இசற் நிறுவனத்தின் வலி.மேற்குத் திட்ட இணைப்பாளருமான திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் மங்கள விளக்கேற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவனேசன் உரையாற்றுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.** (ம-49)

## அன்பைப் பகிர்ந்து கொள்வோம்

அன்று ஒரு நாள் எல்லா மக்களிடையேயும் எதிர்பாராத நிகழ்வு. ஒருபகுதியினர் மக்கள் எல்லோரையும் வெளியேறும்படி அழைப்பு விடுக்கின்றனர். மறுபுறத்தோர் தங்கள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வெளியேற விடாமல் தடுக்கின்றனர். மக்கள் செய்வதறியாது பல இடையூறுகளை எதிர்கொண்டு உயிர் தப்பினால் போதும் என்ற அங்கலாய்ப்பில் போரற்ற இடங்களை நோக்கி தஞ்சமடைந்தார்கள்.

அவர்களை வரவேற்று பல முகாம்கள் அமைத்து தஞ்சம் கொடுத்து ஆதரித்தாலும் இடம்பெயர்ந்தோர் என்னும் நாமம் சூட்டி இரண்டாம் தரப்பினராக கருதப்பட்டு வந்த போதிலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை மனநிறைவுடனும் விரும்பிய வாழ்க்கை அமையாவிட்டாலும் கிடைத்த வாழ்க்கையை ஓரளவு சகித்து வாழும் இன்றைய கால கட்டத்தில் கல்விக் கூடங்களிலும் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளில் பாரபட்சமும் அவர்களின் வளர்ச்சி நோக்கங்கள் மட்டில் பங்காளிகளாக இல்லாது பார்வையாளராக இருப்பதையும் கண்கூடாக காண்கின்றோம்.

இந்நிகழ்வை மனிதாபிமான நோக்கோடு கிறிஸ்தவ விழுமியங்களுடன் மாற்றி அமைப்பது எம்மவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருக்கின்றது. இன்றைய இறை சிந்தனை கூறுவது "என் வார்த்தையை கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள்" என்று யேசுவின் மீது சினம் கொண்டு யூதர்கள், நீ சமாரியன், பேய்பிடித்தவன் எனத் திட்டுகிறார்கள்.

**38ஆம் நாள்**

யேசு அவர்களுக்கு பதில் கூறுகையில் பேய்பிடித்தவன் என்பதை மட்டுமே மறுக்கிறார். பிறப்பால் அவர் சமாரியன் அல்ல; பாவிகள் தாழ்த்தப்பட்டவர்கள், புறவினத்தோர் போல் யேசுவின் இலக்கு மக்களாக இருந்ததனால் சமாரியன் ஆக்கிக்கொள்கிறார். பெருமை எது என்பதற்கு பட்டங்கள் புகழ்பெறுதல் பெருமையாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் உண்மையைச் சார்ந்து வாழ்ந்து விண்ணகத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதில்தான் உண்மையான பெருமை இருக்கிறது.

**தவக்காலச் சிந்தனை**

நாம் அனைவரும் இறைவனின் அன்புக்குரிய பிள்ளைகள் என்பதை உணர்ந்து அன்பைப் பகிர்ந்து கொள்வோம். எல்லா மக்களுக்கும் உரிமைகள் உண்டு என்பதை அறிந்து அவர்களுக்கு அனைத்தும் கிடைக்க வேண்டும் என உணர்ந்து வாழ இந்த ஆயத்த காலம் சிறந்த காலமாகக் கருதி செயற்பட முன்வருவோம்.

**கே.கீதபொன்கலன்,**
*ஆனைக்கோட்டை.*

## ஓய்வுபெறும் நீதிமன்ற பதிவாளருக்கு சமாதான நீதிவான் நியமனம் வழங்குக!

### சங்க மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

இலங்கை நீதிமன்றங்களில் கடமையாற்றும் பதிவாளர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும்போது அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனம் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு நீதிமன்றப் பதிவாளர் சங்க மாநாட்டில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 10ஆம் திகதி கல்கிசை மவுன் லங்கா ஹோட்டலில் முன்னாள் சங்கத்தலைவர் எஸ்.பலிகக்கார தலைமையில் நடைபெற்ற பதிவாளர் சங்க மாநாட்டில் மேலும் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வருமாறு:-

★ பதிவாளர்களின் சம்பளங்களை உயர்த்தி, நீதிமன்ற செயற்பாடுகளுக்கு பதிவாளரை முதன்மைப்படுத்த வேண்டும்.

★ பதிவாளர்களுக்கு அரசாங்க விடுதிகள் அமைத்துத் தர வேண்டும்.

★ சலுகை அடிப்படையில் கார்களை கொள்வனவு செய்யவும் தனிப்பட்ட தொலைபேசிச் சேவையை பெற்றுக்கொள்ளவும் உதவவேண்டும்.

★ ஓய்வுபெற்றுச் செல்லும் பதிவாளர்களுக்கு நொத்தாரிசு பதவி வழங்கப்படவேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு நீதிஅமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-6)

# உள்நாட்டு யுத்தம் நடக்கும் நாடுகளுக்கு ஆயுத உதவி நோர்வே வழங்கியதில்லை

### அந்நாட்டு தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.6

உள்நாட்டு யுத்தங்கள், ஆயுதக் கிளர்ச்சிகள் நடைபெறும் நாடுகளுக்கு நோர்வே ஒருபோதும் ஆயுதங்களையோ, ஆயுதத்தளபாடங்களையோ வழங்குவதில்லையென்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் ஸ்ரேன்ஜ் லேண்ட் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சி மற்றும் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுவரும் நாடுகளுக்கு யுத்தத் தளபாடங்கள் வழங்குவதில்லையென்ற நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையில் எத்தகைய மாற்றங்களும் இதுவரையில் ஏற்படவில்லை. அத்துடன் நோர்வே இலங்கைக்கு எதுவித ஆயுத தளபாடங்களையோ அல்லது படையினருக்குத் தேவையான பல்வேறு பொருள்களையோ வழங்கியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறானவை என அவர் மறுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புலனாய்வுத் தகவல்களைப் பரிமாற இலங்கை – ரஷ்யா கூட்டு ஒப்பந்தம்

கொழும்பு,ஏப்.6

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்புக்களை வழங்கவும் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையில் இலங்கையும், ரஷ்யாவும் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டன.

ரஷ்ய சமஷ்டி பாதுகாப்புச் சேவையின் தலைவர் நிக்கொலாய் பட்ருஷேக்கும் இலங்கையின் பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இலங்கை பொலீஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும், வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகள் பலரும், ரஷ்யாவின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இந்த உடன்படிக்கையின்படி இரு நாட்டுப் பொலீஸாரும் சர்வதேச குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவர். போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோத பொருளாதார, நிதி நடவடிக்கைகள், சட்டவிரோதக் குடியேற்றங்கள் என்பவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளும் இந்த கூட்டு நடவடிக்கைக்குள் அடங்கும் அம்சங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதுதவிர பாதுகாப்புத் துறையில் இருதரப்பினரும் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பரிமாறிக் கொள் ளவும் இந்த உடன்படிக்கை வழியமைத்துள்ளது. இந்த உடன்படிக்கையை வெகுவிரைவில் இலங்கையின் அமைச்சரவை அங்கீகரிக்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## விளக்கு போன்று எரியும் 'பல்பு'கள்!

தென்மராட்சி,ஏப்.6

வடமராட்சிப் பகுதியில் உள்ள பொலிகண்டிப் பகுதி வீடுகளில் விளக்கு வெளிச்சத்தை விட குறைந்த வெளிச்சத்தில் மின்விளக்குகள் எரிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இப்பகுதிக்கு ஒன்றுவிட்டு ஒரு நாளைக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அந்த நாள்களிலும் 'பல்பு'கள் மின்னிக் கொண்டு இருக்கின்றன. இதனால் அங்கு மாணவர்கள் விளக்கு வெளிச்சத்திலேயே படிக்கும் நிலை தொடருகிறது.

இது குறித்து மின்சாரசபை அதிகாரிகள் அக்கறை எடுப்பார்களா? என்று அப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (க-117)

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன

பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களில் தரித்து நிற்கும் மூன்று கப்பல்களில் இருந்து தற்பொழுது பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'பிறைட் ஒவ் சவுத்' கப்பலிலிருந்து இலவச பாடநூல்கள், நிவாரணத்திற்கான பொருள்கள், திரிபோஷா மா பைக்கற்றுக்கள், மின்சார சபைக்கான உபகரணங்கள் ஆகியனவும் தனியாருக்கான பொருள்களும் இறக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'பொல்கொட்', 'வாதுவ' ஆகிய கப்பல்களிலிருந்து தனியாருக்கான புடைவைகள் மற்றும் பொருள்கள் இறக்கப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10)

### கொழும்பில் புலிகளுக்கு புகலிடம் தரும்

## தமிழ் வர்த்தகப் பிரமுகர் விரைவில் கைதாவாராம்!

கொழும்பு,ஏப்.6

கொழும்புக்குள் ஊடுருவும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்கி வருவதாகச் சந்தேகிக்கப்படும் தமிழ் வர்த்தகப் பிரமுகர் ஒருவர் விரைவில் கைதுசெய்யப்பட இருப்பதாக கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜெரால்ட் இக்னேசியஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் திருமலையில் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கூட்டிவரப்பட்ட நந்தினி என அழைக்கப்படும் பெண்புலி உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவர் வெளியிட்ட தகவலின் பேரில் இந்த வர்த்தகர் கைது செய்யப்பட இருப்பதாக அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய குறிப்புப் புத்தகம் ஒன்று கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

## யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்த செயலமர்வுகளின் மூன்றாவது இறுதி நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக அரங்கில் நடைபெறவுள்ளன.

ஆரம்ப நிகழ்வாக காலை 9.00 மணிக்கு "யாழ்ப்பாண பொருளியலின் தளம்பலும் காரணங்களும்" என்பது குறித்து வி.பி.சிவநாதன் உரையாற்றுகிறார். காலை 9.45 மணிக்கு "வேளாண் பீடைகளின் சூழலுடன் இணைந்த முகாமைத்துவம்" என்ற பொருளில் ஜி.மிகுந்தன் உரை நிகழ்த்துகிறார். பகல் 10.45 மணிகரு பிரிவு ரீதியான கலந்துரையாடல்களும் தொடர்ந்து வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

பிற்பகல் 2.00 மணிக்கு "எதிர்காலத்தைப் பிரதிபலிக்கும் வடக்கு-கிழக்கு இலங்கையின் சுகாதாரப் பராமரிப்பு" என்ற தலையங்கத்தில் கலாநிதி என்.சிவராஜா உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் நடைபெறும். (க-6)

## செப்ரிசீமியாவால் குடும்பப் பெண் மரணம்

செப்ரிசீமியாவால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் கடந்த செவ்வாயன்று உயிரிழந்தார்.

நவாலி வடக்கைச் சேர்ந்த இராசு இராசமலர்(வயது-50) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த (33) விவாகரத்துப் பெற்ற, செவ்வாய்க குற்றமற்ற, ஆயிலிய நட்சத்திர, தனியார் வைத்தியராக, சொந்த வைத்திய நிலையம் வைத்து நடத்துபவருக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த படித்த, அழகான, பண்பான பெண்ணை பெறறோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புக்கு: விள.இல.1254, மே/பா உதயன். கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86305)

## விற்பனைக்கு

பவுண் அடிக்கும் டைமெசின், பவுண் 1, 1/2, 1/4 மற்றும் பிள்ளையார், முருகன், இலக்குமி (மொத்தம் 13 கசற்) தொடர்பு: V.V.M.S, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (யாழ். பைரவி கடைச்சல் தொழிலகம் முன்பாக) (86294)

EUROSTAR LT - 950 ALFA GOLD - LT - 730 [500 சனல] LMBF - LMB டிஸ் அன்ரனா (8 அடி. 10 அடி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.RAHKUMAR, MARKET LANE, AVARANGAL. T.P: 212665. (86231)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியையும் (யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள) மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் வீதியில் யாழ்ப்பாணம் பிரதம தபாற்கந்தோர் முன்பாகக் கடைகள் கட்டுவதற்கு வசதியான காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு: குமார், யாழ்ப்பாணம் என்பவரிடம் தொடர்பு கொள்ளவும். **T.P-2917.** (86290)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 42 வயது நிரம்பிய, விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை. மணமகன் தாரம் இழந்தவராகவோ விவாகரத்துப் பெற்றவராகவோ இருக்கலாம். பிள்ளைகள் இல்லாது இருத்தல் வேண்டும். தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: விளம்பர இல.1253, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86255)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் தெய்வீக ஏட்டினால் தீராத அவஸ்தை தரும் நோய்கள் அற்புத குணம் பெறல். அதிஷ்டகரமான பலனை அறிதல். சனி, ஞாயிறு 9.00-5.00 p.m. தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (86303)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த வைத்திய குடும்பத்துக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முழு விவரத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: Dr. ராஜன், மே/பா, சுந்தரலிங்கம், வதிரி, கரவெட்டி. (86306)

## புறொயிலர் குஞ்சுகள்

BAIRAHA FARM'S புறொயிலர் குஞ்சுகள் 5 நாள்கள் வளர்ச்சி அடைந்தவை. குறைக்கப்பட்ட விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி. அல்லது 'கிளீன் சொட்' அருகில், பஸ் நிலையம், யாழ்பபாணம். (86317)

---

வெளிவருகின்றது

# NEO

(c/16093)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
கல்வியியற்றுறையில்
கலாநிதிப் பட்டம் பெற்ற எமது நண்பனும்
விரிவுரையாளருமான
**கலாநிதி**
**இராமநாதன் சாந்தன்**
B.A(HONS), B.Ed., M.Phill (Cey)

அவர்களை இறைவன் திருவருளால் மேலும் தமது துறையில் வெற்றிகளைப்பெற வாழ்த்துகின்றோம்.

திரு. த.ஜெயக்குமார்
(மேனகா அச்சக உரிமையாளர்)
திருமதி ஜெ.சிவனேஸ்வரி (ஆசிரியர்),
நிறுவன ஊழியர்களும்.

மேனகா அச்சகம்,
*342, K.K.S. வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(86310)

---

தில்லயம்பதியாள் துணை

# தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே!



**இராகம்:- கல்யாணி**

ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாய்ம்மா.

*ஆக்கம்:-* அருட்கவி செம்மல் **ந.வீரமணி ஐயர்**
*பாடியவர்:-* **கலைமாமணி T.M.சௌந்தரராஜன்**

**இன்று**
**கோண்டாவில் தில்லையம்பதியில்**
**வருடாந்த பங்குனி உத்தர**
**சங்காபிஷேகம்.**



*விழா உபயம் :-* **அரச ஊழியரும், ஓய்வூதியம் பெறுவோரும்.**
**திருக்கோயில் பரிபாலன சபை.**

(86318)

---

புத்தாண்டை முன்னிட்டு
**யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அவையின்**
ஆதரவுடன் நடத்தப்படும்

## மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி - 2001

(ஆண், பெண் இருபாலாரும்)

**விண்ணப்ப முடிவு திகதி: 10.04.2001**

போட்டி நடைபெறும் திகதி: 15. 04. 2001 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 7 மணி
ஆரம்ப இடம்: யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கு
★ பெறுமதிமிக்க கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

**விண்ணப்பங்களை அந்தந்தப் பிரதேச செயலக பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.**

**மாவட்ட செயலகம்,**
*யாழ்ப்பாணம்.*

(86324)

---

# பாராட்டி வாழ்த்துகின்றேன்



## கலாநிதி இராமநாதன் சாந்தன்

B.A.(HONS), B.Ed., M.Phill (Cey).

**எனது நண்பனும், விரிவுரையாளருமான இராமநாதன் சாந்தன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையில் கலாநிதிப்பட்டம் பெற்றமைக்காக, அவரை வாழ்த்துவதோடு சகல வளங்களும் பெற்று நீடூழி வாழ்கவென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.**

**ம.அன்ரன்போல் M. A. (Cey.)**
விரிவுரையாளர்,

கலைப்பீடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

(86307)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 24ஆம் நாள் இன்று (06.04.2001) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.40 மணி முதல் 2.00 மணிவரையுள்ள கடகலக்கின சுப முகூர்த்த வேளையில்,

**சண்முகலிங்கம் தம்பதிகளின்**
**புத்திரன்**
**திருநிறை செல்வன்**
**சாந்தலிங்கம்**
**(பிரான்ஸ்)**

**கந்தையா தம்பதிகளின்**
**புத்திரி**
**திருநிறை செல்வி**
**குமுதினி**
**(போதனா வைத்தியசாலை)**

ஆகிய இருவருக்கும் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்: **திவ்விய ஜீவன சங்க மண்டபம்,**
சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

**திரு.திருமதி சண்முகலிங்கம்**
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*

**திரு.திருமதி டாக்டர் கந்தையா**
*வெள்ளாம்போக்கடி, கொடிகாமம்.*

வரவேற்பாளர்கள்:
*திரு.திருமதி சபேசலிங்கம்.*
*செல்வன் சத்தியலிங்கம்.*

திரு.திருமதி. வசந்தகுமார் (லண்டன்)
திருமதி வசந்தி (கொழும்பு)
திருமதி இந்திராதேவி (லண்டன்)
செல்வன் இந்திரகுமார்.

.. (இருவீட்டார் அழைப்பு)

**(86311)**

---

# மரண அறிவித்தல்

## திருமதி கமலம் நடேசலிங்கம்

உரும்பிராயைச் சேர்ந்த திருமதி கமலம் நடேசலிங்கம் நேற்று (5-4-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வ.நடேசலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரகுமார், கலைச்செல்வி, கலைமணி, கலையரசி, காலஞ்சென்ற இளங்கோ ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவீந்திரசோதி, யோகரத்தினம்,பாஸ்கரன் ஆகியோரின் மாமியாரும், திருமகள், திருவேணி, குமணன், இளவேனில், பிருந்தன், ஆரணி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிககிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*'வெண்ணிலா'*
*பலாலி வீதி,*
*உரும்பிராய்.*

(86304)

*தகவல்:-*
**ந.சந்திரகுமார்.**
(மகன்)

# ஐ. நா. தடையால் ஒரே மாதத்தில்
# 10 ஆயிரம் ஈராக்கியர் மரணம்!
## அவர்களில் 7,270 பேர் குழந்தைகள்

பாக்தாத் ஏப். 6

ஐ. நாவின் பொருளாதாரத் தடையின் தாக்கத்தால் ஈராக்கில் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு ஈராக்கிய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அமுலில் இருந்துவரும் ஐ. நாவின் தடையால் மக்கள் நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிடுகிறது.

அதில் அதிக எண்ணிக்கையானவர்கள் சிறுவர்களாவார்கள். 5 வயதுக்கும் குறைவான 7,270 குழந்தைகளும் அதற்குள் அடங்குகிறார்கள்.

போஷாக்குக் குறைபாட்டுடன் சம்பந்தப்பட்ட நோய்கள், வயிற்றோட்டம், நிமோனியா, சுவாசக்கோளாறுகள் ஆகியவை காரணமாகவே குழந்தைகள் மரணிக்க நேர்ந்துள்ளது.

1990 ஓகஸ்ட் மாதம் அமுலுக்கு வந்த ஐ.நாவின் பொருளாதாரத் தடையின் பாதிப்பால் இதுவரை ஈராக்கில் 14இலட்சத்து 71ஆயிரத்து 425 பேர் இறந்துள்ளனர்-

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத் மீது ஈராக் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு முயற்சியை அடுத்து ஐ நா. ஈராக் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்தியிருப்பது தெரிந்ததே. (ஓ-6 9)

### நடுவானில் நிகழ்ந்த விபத்துக்கு
## அமெரிக்காவின் மன்னிப்பைக் கோருகின்றார் சீன அதிபர்

பெய்ஜிங், ஏப். 6

அமெரிக்கப் போர் விமானம் ஒன்று சீனப் போர் விமானத்துடன் மோதி அதனை விபத்துக்குள்ளாக்கியதுக்கு பொறுப்பேற்று, அமெரிக்க அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இவ்வாறு சீன அதிபர் ஜியாங்ஜெமின் கோரியுள்ளார்.

நடுவானில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்கா நஷ்டஈடு தரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்த விபத்துக்காக மன்னிப்புக் கேட்கும் பேச்சுக்கே இடமில்லை என்று அமெரிக்க அரசு திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

4 நாள்களின் முன்னர் 24 கடற்படை அதிகாரிகளுடன் பறந்த அமெரிக்க உளவு விமானம், சீனப் போர் விமானத்துடன் மோதி சேதமடைந்ததால் சீனாவின் கைலான் தீவில் தரையிறங்கியது. விமானத்தையும், அதிகாரிகளையும் சீன அரசு தடுத்து வைத்துள்ளது. சீனப் போர் விமான விமானி குவான்லீயை தேடும் பணிகள் தொடர்வதாகக் கூறப்படுகிறது.

[ஓ-6-9]

நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கம்
**பண்ணிசைப் போட்டி**

மேற்படி சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட
பண்ணிசைப் போட்டி
பலரின் வேண்டுகோளுக்கு இணங்க
**விண்ணப்ப முடிவு திகதி 15-04-2001**
வரை நீடிக்கப்பட்டுள்ளது.

[சி/16114] நிர்வாகம்.

# 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்



## திருமதி சரஸ்வதி அண்ணாமலை

அன்னை மடியில்; 24-01-1924
ஆண்டவன் அடியில்: 07-03-2001

இங்கள் ஒன்று சென்றாலும்
தீயில் நீங்கள் வெந்தாலும்
நெஞ்சம் மறக்குமா உங்கள் நினைவுகளை?
நீங்கள் காட்டிய பாசத்தை, அன்பு நேசத்தை
எம் இயத்தில் என்றென்றும்
நினைவு கூருவோம்!

கடந்த 07-03-2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் நினைவாக இன்று (06-04-2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அ. பாலசுப்பிரமணியம்,
வேதவுடையார் வளவு,
மல்லாகம்.

(86276)

# தமிழக அரசியலில்...

## ம.தி.மு.கவின் ஒத்துழைப்பை பா. ஜ. க. தலைவர் ஏற்க மறுப்பு

சென்னை, ஏப். 6

தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில், ம. தி. மு. கவுடன் இணைந்து பாரதிய ஜனதா தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடாது என்று பா. ஜ க. தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பா.ஜ.க. போட்டியிடும் 21 தொகுதிகளிலும், அந்தக் கட்சி வேட்பாளர்களை ஆதரிக்கப் போவதாகவும் —

மற்றைய தொகுதிகளில் தனித்துப் போட்டியிடப் போவதாகவும் ம. தி மு.க. அறிவித்திருந்தது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனா கிருஷ்ணமூர்த்தி, தி. மு. க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவாக மட்டுமே பாரதீய ஜனதா பிரசாரம் செய்யும் என்று தெளிவுபடுத்தினர்.

தி.மு க. கூட்டணி வேட்பாளர்களை எதிர்ப்பவர்களை பாரதிய ஜனதா எதிர்க்கும் என்றும் அவர் கூறினார்.

(ஓ-9)

## புதுவை தி.மு.க. கூட்டணியில் கண்ணன் கட்சிக்கு 9இடங்கள்

புதுவை, ஏப். 6

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலில் தி. மு. கவுக்கும், முன்னாள் அமைச்சர் கண்ணன் தலைமையிலான புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன்படி புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் 9 தொகுதிகளில் போட்டியிடும்.

தி.மு.க. 13 தொகுதிகளில் போட்டியிடும், பாரதிய ஜனதாவுக்கு 5 இடங்களும், 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்புக்கு 3 இடங்களும், ஐக்கிய ஜனதா தள்ளுக்கு ஓர் இடமும் வழங்கப்பட்டுள்ளன.

[ஓ-9]

### தீவிரவாதிகளை விடுவிக்கக் கோரி
# மேற்கு வங்கப் பொலிஸாரை சிறைப் பிடித்த பெண்கள்!

கொல்கத்தா, ஏப். 6

மேற்கு வங்காளத்தில் பொலிஸாரின் சோதனைச் சாவடியை பெண்கள் சுற்றி வளைத்துள்ளனர். அங்கிருந்த 7 பொலிஸாரை அவர்கள் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாவோ கம்யூனிஸத் தீவிரவாதிகள் 27 பேரை விடுதலை செய்யும்படி அந்தப் பெண்கள் கோரியுள்ளனர்.

மேதினப்பூர் மாவட்டம் குலாபதிப் பகுதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியே நேற்று முன்தினம் இரவு முதல் பெண்களால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மாவோ கம்யூனிச அமைப்பின் மகளிர் பிரிவான நாரி முக்தி சமிதியைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 பெண்கள்இந்தமுற்றுகைப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு அதிக பொலிஸ் படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக மாநில நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

புருலியா மாவட்டம் பாம்புரா மற்றும் மெதினாப்பூர்ப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, 27 மாவோ கம்யூனிச தீவிரவாதிகளைப் பொலிஸார் முன்னதாக கைது செய்திருந்தனர்.

## எரி வாயுக்கருவி பொருத்த அவகாசம் நீடிப்பு

இந்தியாவின் புதுடில்லியில் இயற்கை எரிவாயு கருவிகளை வாகனங்களுக்குப் பொருத்துவதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடித்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

டில்லியில் அமுலுக்கு வந்த மாசுக் கட்டுப்பாட்டு விதிகளின்படி எரிவாயுவினால் இயங்கும் பொது வாகனங்கள் மட்டுமே சேவையில் ஈடுபட முடியும் இதனால் அரசு பஸ்கள் உட்பட பல பொது வாகனங்கள் சேவையில் ஈடுபட முடியாதிருந்தது தெரிந்ததே.

## வாஜ்பாய்க்கு மீண்டும் அறுவைச் சிகிச்சை

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அடுத்த மாதம் மீண்டும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக முழங்கால் மூட்டு வலியால் அவதியுற்ற வாஜ்பாய்க்கு கடந்த ஆண்டு ஒரு காலில் அறுவைச் சிகிச்சை நடந்தது. தற்போது மற்றைய காலில் சிகிச்சை நடக்கவுள்ளது.

## சுதேசித் தயாரிப்பு ரொக்கெட்டை இந்தியா விரைவில் மீண்டும் ஏவும்

இந்தியாவின் சுதேசித் தயாரிப்பான ஜி எஸ் எல்.வி ''ரொக்கெட்'' எதிர்வரும் 18 அல்லது 19 ஆம் திகதியில் மீண்டும் விண்ணில் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி ஸ்ரீ ஹரிக்கோட்டா ஏவு தளத்தில் இருந்து இந்த 'ரொக்கெட்டை' ஏவ மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன.

''ரொக்கெட்டில்'' முதற்றடவையாகப் பொருத்தப்பட்ட ''கிரையோனிக்'' இயந்திரத்தில் நிரப்பப்பட்ட திரவ எரிபொருள் சரியாக நிரப்பப்படாததாலேயே அதனை இயக்குவதில் பிரச்சினை ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கென ரஷ்ய விஞ்ஞானிகள் குழு ஒன்று இந்தியா வந்துள்ளது இந்த ''கிரையோனிக்'' இயந்திரம் ரஷ்யா இருந்தே கொள்வனவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம)

## விற்பனைக்கு

சகல அளவுகளிலும் உள்ள ரெஜிபோம் சீற் வகைளும், ரெஜிபோம் பெட்டிகளும் மற்றும் வெங்காயம் பொதி செய்யும் நெற் பாக் (Bag) என்பனவும் விற்பனைக்கு உண்டு.

**ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்,**
213 C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(86323) தொலைபேசி:2916

## கௌரவிப்பு

சங்கரத்தை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலயத்தின் விழாக் காலத்தில் தெய்வீக விரிவுரை நிகழ்த்திய ''சொல்லின் செல்வர்'' இரா செல்லவடிவேலைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் 'தேவி பாகவதம்' எனும் தொடர் விரிவுரையை நிகழ்த்தியதைக் கௌரவித்து பொன்னாடை போர்த்தியும் தங்கம் பதக்கம் சூட்டியும் இவர் கௌரவிக்கப்படவுள்ளார். (3 10)

## சுழற்சி முறை---

(முதலாம் பக்கத் தொடர்)

''மாநகரசபை நிர்வாகத்தினால் சட்டத்திற்கு முரணான வகையில் பாதிக்கப்பட்ட சுகாதார ஊழியர்களின் செயற்பாட்டுக் குழு'' என்ற பெயரில் அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### காரணங்கள்

1. வடகிழக்கு மாகாண சபை ஆளுநரின் அறிவித்தலின் பிரகாரம் வடக்கு — கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரூடாக, மாநகர சபை சுகாதாரப் பிரிவின் நிர்வாகத்தினரால் ஏற்படுத்தப்பட்ட தடங்கல்களை விசாரிக்க ஓர் உயர் அதிகாரி நியமிக்கப்பட்டு, நாளை முதல் விசாரணை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2 எமது வடக்கு—கிழக்கு உயர் அதிகாரி திரு. வி. பி. பாலசிங்கம் எங்களுக்கு விடுத்த அன்பான வேண்டுகோளை நாம் ஏற்று ஆளுநரின் தீர்மானங்கள் வரும் வரை எமது போராட்டத்தை இடைநிறுத்தச் சம்மதித்துள்ளோம்.

3. நாளையிலிருந்து எமது வெளிக்கள பணிகள் இது வரை வழங்கியதுபோல் எம்மால் வழங்கப்பட்டு வரும்.

4. கௌரவ முதல்வர் பத்திரிகைகள் மூலம் விடுத்த அறிக்கையும் அனுப்பிய கடிதங்களும் எமது களங்கமற்ற சேவையை அவமதிக்கும் விதத்திலும் அடிமைத்தனத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளபடியால் எம்மால் அவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

5. எமது நியாயமான போராட்டத்திற்கு அடிப்படைக்காரணிகளை ஆராயாமல், மக்களுக்கு உண்மையான தகவல்களை மறைத்து, தமக்கு சாதகமான — உண்மைக்குப்புறம்பான — தகவல்களை பத்திரிகைக்கு கொடுத்து மக்களிடையே எமது கடந்தகால, நிகழ்கால சேவைக்குக் களங்கம் ஏற்படுத்தமுயலும் நிர்வாகத்தை மக்கள் இனம் கண்டு விட்டார்கள். அது எமக்குப் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வரும் ஆதரவு தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

6. எமது சிகிச்சை நிலையங்களை எமது சுகாதார வைத்திய அதிகாரிக்கும் எமக்கும் செல்லத்தடை விதித்து விட்டு, மக்களுக்குத் தகைமையற்றவர்களைப் பயன்படுத்தி சேவையை வழங்க முன்வந்திருக்கும் நிர்வாகத்தின் போலிவேசத்தையும் அதன் விளைவுகளையும், மக்கள் உணர்ந்து, தம்மைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டி, ஆளுநரின் முடிவின்பின் எமது சிகிச்சை நிலையத்தைத் திறக்கும் வரை பொறுத்திருக்க வேண்டுகின்றோம்

எமது நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு தந்த சகல நிறுவனங்கள், அமைப்புக்கள், பொதுமக்கள் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் கடந்த பல வருடங்களாக இருந்த சுகாதார கட்டமைப்பு மீண்டும் விரைவில் ஏற்படுத்தித் தற்காலிகமாக எமது தாய்-சேய் நிலையங்கள் எதிர்நோக்கும் இடர்கள் நீங்கி, எமது நிலையங்கள் சிறப்பாக எதிர்காலத்தில் இயங்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

### பிற்குறிப்பு

1. எமக்குத் தனித்தனியே 02/04/2001 இல் கௌரவ முதல்வரினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் நாம் தாமாகவே விலகுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது. இதற்கான சாட்சியமாக 03/04/2001 இல் எமது சுகாதார வைத்திய அதிகாரிக்குக் கௌரவ முதல்வர் அனுப்பிய கடிதத்தில் எமக்கு வழங்கப்பட்ட வேலை நீக்கக் கடிதத்தை மீளப்பெறுவது ஓர் அம்சமாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப் பற்றிய மேலதிக விவரத்தை அறிய சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொள்ளலாம்.

2. இன்னும் ஒரு முக்கிய விடயம், கடந்த ஐந்து மாதங்களாக பல புதிய நியமனங்கள் யாழ். மாநகர சபையில் வழமைக்கு மாறான முறையில் தமக்குத் தெரிந்தவர்களுக்கும் இணைந்து செயற்படுபவர்களுக்கும் நிர்வாகத்தினரால் வழங்கப்படுகிறது. இதில் கல்வித்தகைமையோ ஏனைய விடயங்களோ புறக்கணிக்கப்பட்டதையும் அவதானிக்க முடிகிறது.

—இவ்வாறு அந்தப் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகைக் குறிப்பில் தாம் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதற்கு ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைதான் காரணம் என்பது குறித்து எதுவும் பிரஸ்தாபிக்காத அமைப்புக்குழுவினர், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருக்கு நேற்றைய திகதியிட்டு அனுப்பிய கடிதத்தில் அந்த விடயம் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கின்றார்கள்.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

எம்மால் 04-04-2001 இல் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறோம். 2001-04-04 ஆம் திகதி ஈ. பி. டி. பி அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. எஸ். தவராசா, திரு. கே. வி. குகேந்திரன், திரு எஸ் சிவதாசன் ஆகியோரினால் எமது கோரிக்கைகள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டன. இது சம்பந்தமான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதால், மேற்படி விடயம் சம்பந்தமான இறுதி முடிவினை எதிர்பார்த்து இன்று (05-04-2001 இல்) இருந்து நாங்கள் எமது சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஈ.பி டி பி அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளோம் என்பதனைத் தங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

—இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

## 'ஆசிரியத் தொழில்' வெளியீட்டு விழா

அச்சுவேலி, ஏப். [illegible]

'ஆசிரியத் தொழில்' நூல் வெளியீட்டு விழா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ந. வரதராசன் 'ஆசிரியத் தொழில்' நூலை எழுதியுள்ளார்.

(க-11)

## சிமெந்து நிறுவன ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஏப். 6

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் சம்பளமுற்பணக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியிலிருந்து பகல் 1-00 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## காரைநகர் ஆலய வரலாற்று மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 6

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வரலாற்று மலர் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11. 45 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் ஆலய மகோற்சவக் குரு கு. சரவணபவக் குருக்கள், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ் ஏ ஈ.ஏகநாதன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் வை. பரமேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

அகில இலங்கை திருமுறை மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் நயவுரை நிகழ்த்துவார்.

(க-3)

## சாவகச்சேரியில் குண்டு வைத்து வீடுகள் தகர்ப்பு

தென்மராட்சி, ஏப். 6

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் உள்ள இரு வீடுகள் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டுள்ளதாக அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர். (க-117)


## திறப்புவிழா

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித்திங்கள் 25 ஆம் நாள் (07-04-2001) நாளை சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு அத்த நட்சத்திரம் கூடிய சுபவேளையில்

நெல்லியடியில் புதுப்பொலிவுடன்

### ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்

மாயவப்பெருமானின் திருவருளால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனைப் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இ. குமரேஸ்வரன் (குட்டி)
உரிமையாளர்.

கொடிகாமம் வீதி,
நெல்லியடி. T P. 3282

(சி/16124)

உ

மல்லாகம்

## அருள்மிகு காளிகாதேவி ஆலயம்

மல்லாகம் அருள்மிகு காளிகாதேவி ஆலய வருடாந்த அலங்கார உற்சவ நிறைவு விழாவும் சங்காபிஷேகமும் பங்குனி மாதம் 24ஆம் திகதி இன்று (06 04.2001) வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளன.

பங்குனித் திங்களிலே பவனிவரும் காளித்தாயே!
பன்னிரண்டு தினங்களிங்கே திருவிழாவாம்
திருவருளாம்
புன்னகை பூத்ததாயே புவியடங்க காத்தருள்வாய்
மல்லையில் வாழும் மக்கள் மனக் குறையை
நீ தீர்ப்பாய்
சல்லென சலங்கை ஒலிக்க சடுதியாய் வந்திடுவாய்
அல்லலைக் களையும் தாயே அபயன் சிமாவின்
தாயே
சங்குகள் முழங்க இன்று சங்காபிஷேகம் அம்மா
சிங்கத்திலே ஏறி நீயும் சீக்கிரமாய் வந்திடம்மா.

பிரசுரம்
மு. அற்புததேவன்.

ஆக்கம்
ஆலய பரிபாலன சபை.

(சி/16118)

ஸ்ரீ ராம ஜெயம்

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் (09-04-2001) திங்கட்கிழமை சித்தாமிர்தயோகமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10-20 முதல் 12-11 மணி வரை (பழைய நேரம்) மிதுன லக்கினத்தில்

வட்டுக்கோட்டை
அமரர் ப்ரம்மஸ்ரீ அனந்தசுப்ரமணிய சர்மாவின் பௌத்திரனும்
எனது கனிஷ்ட புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**A.G.S. லக்ஷ்மிநாராயணனுக்கு**

நவிண்டில்
அமரர் ராமலிங்ககுருவின் பௌத்திரியும்
ப்ரம்மஸ்ரீ வேதநாயகசர்மாவின்
கனிஷ்ட புத்திரியுமான
சௌபாக்கியவதி
**V. வரலக்ஷ்மியை**

பாணிக்கிரஹண கன்னிகாதானம் செய்து கொடுப்பதாகவும் திருமாங்கல்ய தாரணஞ் செய்வதாகவும் ஸ்ரீமாங்களாம்பிகா ஸமேத மஹாலிங்கேஸ்வர ஸ்வாமியினதும் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னை நாதஸ்வாமியின் அருள் துணையுடனும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமியினது அனுக்கிரஹத்துடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் கொழும்பு 10, கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வவிநாயக ஸ்வாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் என்பதனைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

ஸ்ரீமதி ஸ்ரீ வடிவாம்பிகை கணேசசர்மா,
கலாபூஷணம் A. கணேசசர்மா B Sc ,J.P ,
4/3, ஹல்கஸ்வத்த லேன்,
கிருலப்பனை,
கொழும்பு - 6, ஸ்ரீலங்கா.

ஸ்ரீமதி ராஜேஸ்வரி வேதநாயகசர்மா,
ஸ்ரீ R. வேதநாயகசர்மா,
வடுவல் தோட்டம்,
நவிண்டில்
கரவெட்டி, ஸ்ரீலங்கா.

(86321)


## மரண அறிவித்தல்

### சண்முகராசா திருகாலவினோதன்

[மூர்த்தி]

மஞ்சத்தடி கிழக்கு இணுவிலைச் சேர்ந்த சண்முகராசா திருகாலவினோதன் நேற்று (05-04-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகராசா—சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் திருலோகநாயகி (சுவிஸ்), காலஞ்சென்ற திவ்வியநாதன் (தவில் வித்துவான்), சண்முகராணி, ராசராணி (சுவிஸ்), கண்ணபிரான், வசந்தகுமாரி (ஆசிரியை, யா/கோண்டாவில் இந்து ம. வி.), தருமராணி (மட்டக்களப்பு), கலைச்செல்வன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05-04-2001) வியாழக்கிழமை காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க.வசந்தகுமாரி
(சகோதரி, யா/கோண்டாவில் இந்து ம.வி.)

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(86339)

## பௌர்ணமி தின பன்னிரு திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் (முடிப்பிள்ளையார் கோயிலில்) மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ க.சிவராஜசர்மா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க)

## கபடி பயிற்சி முகாம்களை நடத்த முடிவு

யாழ்.மாவட்ட கபடிச் சங்கத்தினால் யாழ் மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் ரீதியாக பயிற்சி முகாம்களை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கபடிச்சங்கத் தலைவர் அ.மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும்எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மாவட்ட ரீதியாக ஆண்கள், பெண்களுக்கு இடையேயான கபடிச் சுற்றுப் போட்டியை நடத்துவதுடன் எதிர்காலத்தில் பாடசாலைகள் மட்டத்தில் கபடிப் போட்டிகளை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-86)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு!

வலிகாமம்தெற்கு,ஏப்.6

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றும் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை பிற பகல் 2.30 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு வந்து தம்மைச் சந்திக்குமாறும் -

வரும்போது தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், பரீட்சைப் பெறுபேறுகள், ஆங்கிலத்தில் உள்ள அதி உயர் தகைமை சான்றிதழ், பகுதி நேர ஆங்கில ஆசிரியராக முதல் நியமனக் கடிதம், அந் நியமனம் பெறமுன் கற்பித்தல் அனுபவம் இருப்பின் அது தொடர்பான சான்றிதழ் என்பவற்றை தவறாது எடுத்துவருமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (க-152)

# பாராட்டுகின்றோம்



'பத்திரிகையாளர்' **இளையப்பு கிருபாகரசூரியன்** J.P.

மனித நேயமும், சமூகசேவையும், சால்புடைய நோக்கும் ஒருங்கே அமைந்த புலோலி கிழக்கு

**திரு.இளையப்பு கிருபாகரசூரியன்** அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகவும் வடமராட்சி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி இவரது சேவை வளர இறைவனை வேண்டுகின்றோம்!

புலோலி மத்திய சனசமூக நிலையம்,
உத்திராவத்தை ஞானவைரவர் ஆலயம்,
புலோலி வட-கிழக்கு.

(86319)


**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2003 | வர்த்தகம்
ECO.- சண்
ACC.- N.ராஜன்
COM.- நந்தீஸ்
ஆரம்பம்: 7-4-2001 சனி 2.00
(86282)

**தரம் 5**
**புலமைப்பரிசில் 2001**
அதிகூடிய புள்ளிகள் பெற்றவர்கள்

| | |
|---|---|
| V. தர்மிலன் | J/A.M.M.V. |
| M. யூடிற்றா | H.F.C. |
| S. யசோ | |
| D. சதீஸ் | S.P.C. |
| C.V. ஜோன் கலிஸ்ரஸ் | S.P.C. |
| S. லவகேசன் | S.J.C. |

**I.B.S.** கல்வி நிறுவனம் சுண்டிக்குளி
86336

**அறிவொளி-Nallur**
ஆரம்பமாகின்றன
**A/L -02 இணை.கணிதம்**
B.ரவீந்திரன் B.Sc.
சுருறுப்பு விரிவு Wed. 3 p.m.
நிகழ்தகவு Sat., Sun. 2 p.m.
**A/L -01 GENETICS**
E.சுரேந்திரநாதன் B.Sc.
Mon., Tue. 3.30 p.m.
**A/L -01 Physical Chemistry**
S.சரவணபவன் B.Sc.
Fri. 3.00 p.m.
**O/L Maths Paper Class**
C.K.B.தயாளன் (86322)

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
**A/L 2003**
**வர்த்தகப்பிரிவு**
பிரிவு -2
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : முகுந்தன்
வணிகக்கல்வி: முரளி
ஆரம்பம்: நாளை 07.03.2001
சனி - 8.00 மணி
பிரிவு - 1 9.00 மணி
**கலைப்பிரிவு**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
குறிப்பு: பிரிவு 2 இற்கு சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
இணுவில்
**பொருளியற் கல்லூரி**
K.K.S.வீதி, இணுவில்.
A/L 2003
புதிய பிரிவுகள்
(86341) நடைபெறுகின்றன.

ஆரம்பத்திலிருந்து......
**2003**
**A/L கலைப்பிரிவு**
எமது ஆசிரியர் குழு:
*தமிழ்:* செல்வி பங்கையற்செல்வி
*இ.நாகரிகம்:* திரு.உமாசுதன் சர்மா
*அளவையியல்:* திரு.S.S.மனோகரன்
*கிறிஸ்தவம்:* திருமதி சுனித்தா
*நாடகம்:* திரு.ஸ்ரீ கந்தவேள்
*புவியியல்:* திரு.ஞானேஸ்வரன்
*ஆங்கிலம்:* திரு.சிவசுப்பிரமணியம்
*அரசியல்:* திரு.கேதீஸ்வரன்
**BEACON** யாழ்நகர் (வெலிங்டன் சந்தி)
(86314)

**விக்னா**
கல்வி நிறுவனம்
**A/L 2003**
**கலை, வர்த்தகம்**
புதிய பிரிவு SAT/SUN 8.00மணி

| | |
|---|---|
| ACC. | பாலவாசன் |
| ECO. | விக்கி |
| COM. | நந்தீஸ் |
| LOG. | சயந்தன் |
| TAM. | லிங்கம் |
| H/C. | பத்மராஜா |
| GEO. | ஐங்கரன் |
| HIST. | அன்ரன் |
| CHRIS. | வசந்தன் |
| DRAMA. | மதி |
| I/Q | அன்ரன் |

(86309)


ஐயப்பா சரணம்



## காரைநகர்
# வியாவில் ஐயனார் கோயில் சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்தி விநாயகர் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகமும்

விக்கிரம வருடம் பங்குனி மாதம் 26ஆம் நாள் (08-04-2001) ஞாயிற்றுக்கிழமை நிகழும் மகாகும்பாபிஷேகத்தை அடுத்து முற்பகல் 9-00 மணிக்கு சமயப் பெருவிழா நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அதனைத் தொடர்ந்து இரவு பூரணை புட்கலை சமேத அரிகர புத்திரர் பூந்தண்டிகையில் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

### விழா நிகழ்வு ஒழுங்கு

*ஆசியுரை:*
- நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
- கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான குருமணி பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்
- பிரம்மஸ்ரீ மகாவித்வான், கலாபூசணம், கலாரத்தினம் ந. வீரமணிஐயர் M.A

*சிறப்புரை:* பேராசிரியர் அ.சண்முகதாஸ் (பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)

*சொற்பொழிவு:*
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்(வருகை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி எஸ். சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. து. வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்)
திரு. மு. திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட நீதிபதி)
திரு. S.A.E. ஏகநாதன் (மாவட்ட நீதிபதி - பருத்தித்துறை)
திரு. ந.மு.வி. நவரத்தினம் (முதுநிலை விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கல்லூரி)
திரு. ப. விக்கினேஸ்வரன் (கல்விப்பணிப்பாளர் - தீவகம்)
கவிஞர் சோ. பத்மநாதன்

*நாதஸ்வர இசை*

| | |
|---|---|
| நாதஸ்வர வித்துவான் கலாசூரி | N.K.பத்மநாதன் குழுவினர் |
| விசேட தவில் | K.நித்தியானந்தன் |
| தவில் வித்துவான் | R. முருகானந்தன் |
| நாதஸ்வர வித்துவான் | S. சிவதாசன் |

**இரவு நிகழ்ச்சிகள்:**

*வில்லுப்பாட்டு:* அச்சுவேலி சின்னமணி குழுவினர் '**அருணகிரிநாதர் வரலாறு**' *வில்லிசைக்கப்படும்*

*பட்டிமன்றம்:* தலைவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல்

பொருள்: 'பெண்மை ஆற்றல் பெரிதும் வெளியிடப்பட்டது சீதையிடமா? பாஞ்சாலியிடமா? கண்ணகியிடமா?'

*ஒலி, ஒளி அமைப்பு: மனோ லைட், கோப்பாய்.*
*நண்பகல் மாகேஸ்வரபூசை நடைபெறும்.*
*ஐயனார் அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

*வியாவில்,*
*காரைநகர்.*

- ஆலயபரிபாலகர்.


*விழா சிறப்புற வாழ்த்துவோர்....*
**கிருஷிகா ஆடையகம்**
69 A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
(C/16116)


**விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது**

சுன்னாகம் றோட்டரக்ட கழகம் நடத்தும்

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

முடிவு திகதி :-11-04-2001
விண்ணப்பப்படிவம் பெறும் இடங்கள்:-
- அருணா ஸ்போட்ஸ் ஸ்பொட்.
- TRRO - மருதனார்மடம்.

(C/16120)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கோபாலு

குடவததை துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வதிரி, கரவெட்டியைப் புகுந்த இடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கோபாலு 03.04.2001 அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னைபாக்கியத்தின் (கனடா) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தா.சின்னப்பிள்ளை, வ.கணபதிப்பிள்ளை, ஆகியோரின் சகோதரரும், கந்தசாமி (கனடா) ஜெ.அன்னலட்சுமி, கி.தனலட்சுமி, செந்தூர்நாதன் (கனடா), சி.விஜயலட்சுமி, பகீரதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், க.விஜயமலர் (கனடா), ஐ.ஜெயக்குமார் (வாகன உரிமையாளர்), காலஞ்சென்ற வி.கிருஷ்ணராஜா, செ.புஷ்பராணி (கனடா) பா.சிறிஸ்கந்தராஜா, மு.நிருவரன், சி.பவானந்தினி, தி.பிரதீப், தி.வேணுரேகா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற தாமு, காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற தருமலிங்கம், ஆ.யோகாம்பிகை, ஆ.திரவியம் (கிராமசேவையாளர், கரணவாய் தெற்கு), ஆ.பரராசலிங்கம் (பொலீஸ் உத்தியோகத்தர் - கொழும்பு) மற்றும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் சி.ஆறுமுகத்தின் சகலனும் காலஞ்சென்ற விவசாய விரிவாக்க சேவையாளர் தங்கமணி, ப.புவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆ.சுதாகரன் (கனடா), நி.சுதாயினி, ஆ.சுகந்தினி, ஆ.சுதர்ஸன், ஆ.சுயந்தன், சி.சிவலிங்கம் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் சந்திரிக்கா, ரகுராம், ஜெனோசினி, தனுகிருஷ்ணா, சுவர்ணா, நிஷாந்தன், நிதுஷன், தினேஷ் (கனடா), டிலெக்ஷன், லேத்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05-04-2001) வியாழக்கிழமை கனடாவிலுள்ள கிருஷல் அன்வைன் என்னுமிடத்தில் இந்து முறைப்படி தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தோட்டவளவு,*
*அல்வாய் தெற்கு,*
*வதிரி,*
*கரவெட்டி.*

தகவல்:
**ஆ.திரவியம** (மைத்துனர்)
(கிராமசேவையாளர் J/348)

(86331)

# கிளிநொச்சி இளைஞர் காங்கேசன் முகாமில்

யாழ்ப்பாணம்,ஏப்.6

விடுத்தலைப்புலிகளின் எல்லைப் படையைச் சேர்ந்தவர் எனக் கூறப் படும் இளைஞர் ஒருவரை காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு இடம் மாற்றியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு பொலீஸாரால் அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த தைமாதம் 16 ஆம் திகதி கிளாலிப் பகுதியில் நடைபெற்ற சண்டையின் போது காயமடைந்த நிலையில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இளைஞரே தற்போது காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த சிறீகாந்தன் சரத்பாபு என்ற இளைஞரே காயங்களுடன் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியிலும் பின்னர் கொழும்பு வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளார் என்றும் -

இவர் தற்போது கொழும்பில் இருந்து அழைத்துவரப்பட்டு காங்கேசன்துறை குற்றப்புலன் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

கல்வியங்காட்டுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களில் இருவர் விடுதலை செய்யப பட்டுள்ளதாகவும் ஒருவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

(க-6)

## புலிகள் தரப்பில் ஒருவர் மரணம்

வடமராட்சிப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி படையினர் நடத்திய தாக்குதலில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழயன் (சிவப்பிரகாசம் லட்சுமி காந்தன் - யாழ்ப்பாணம்) என்பவரே உயிரிழந்ததாக அறிவிக்கப் பட்டது.

(உ-164)

## சித்திரவதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரியின் அறிக்கையில் தெளிவானதை அடுத்து -

இச்சித்திரவதைகளுக்கு காரணமான பொலீஸ் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்களுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

வன்னியில் உள்ள 211 ஆவது படையணியின் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரால் கைது செய்யப்பட்டு இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சில சந்தேகநபர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து எதிர்வரும் 24ஆம் திகதி இராணுவப் பொலீஸ் பிரிவின் மேஜர் தரத்திலான அதிகாரி ஒருவர் நீதிமன்றில் நேரில் ஆஜராகி விளக்கம் தரவேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியா கிளர்ச்சித் தடுப்பு பொலீஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்ட மற்றொரு தமிழர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது குறிதது்ம் நீதிமன்றம் தனது விசாரணையை ஆரம்பித்துள்ளது.

(உ-3-5)

## மிதிவெடியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெடியில் சிக்கி கால் இழந்தார்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தர்மபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரை சிவதாஸ் (வயது 24) என்பவரே காலை இழந்தவராவார்.

(உ-164)

## கொழும்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் மருந்துப் பொருள்கள் கிடைக்கச் செய்வதற்காகவே சிலர் வேறு விதமாகப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அங்கு பெரும் அளவில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அரசு அனுப்பி வருகின்றது.

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. எனினும் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை அடுத்து அது பற்றி விசாரிக்க குழுகளை நியமித்துள்ளோம்.

ஆயுதக் கொள்வனவில் முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கூறப்படும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. எதிர்க்கட்சிகள் கோரும் பட்சத்தில் ஆயுதக் கொள்வனவைக் கண்காணிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார் அவர்.

(உ-3-9)

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் படுகொலை செய்ய விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று 'திவயின' சிங்களப் பத்திரிகை வெளியிட்டிருந்த தலைப்புச் செய்தித்தகவலை அடுத்தே ரணிலின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தற்கொலைத் தாக்குதலுக்குத் திட்டமிட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்புப் பிரிவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதும் -

அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள காரணத்தால் அவரின் அனுராதபுர விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது - என்று கட்சியின் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

பாதுகாப்புப் படையினரின் பணிபபுரைகளைக் கவனத்தில் கொண்டு எதிர்க்கட்சித் தலைவரின் அனுராதபுர விஜயம் ரத்துச் செய்யப்படுவதாக கட்சியின் உப தலைவர் காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

(உ-3-9)

## மல்லாகத்தில் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.6

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி, பெயர்ப்பலகை என்பவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் செல்வி சி.கெங்காமலர்தேவி தலைமையில் நடைபெறும்.

தண்ணீர்த் தாங்கியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவி கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைப்பார். பாடசாலைப் பெயர்ப்பலகையை பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி செ.நடராசா திறந்து வைப்பார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம் கலந்துகொள்வார்.

(ம)

# மீசாலை, அல்லாரையில் மீளக்குடியமர அனுமதி

## விண்ணப்பப்படிவங்கள் விநியோகம்

தென்மராட்சி,ஏப்.6

மீசாலை, அல்லாரை ஆகிய பகுதிகளில் உள்ள சொந்த இருப்பிடங்களுக்கு மீளக்குடியமரவுள்ள மக்களுக்கான மீளக்குடியமர்வு விண்ணப் பப்படிவங்கள் கொடிகாமத்தில் உள்ள சிவில் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

அத்துடன் இப்பகுதிகளில் உள்ள வீடுகளைப் பார்வையிட விரும்பும் மக்களுக்குத் தற்காலிக பாஸ் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமரும் மக்களுக்கு நிரந்தர பாஸ் வழங்கப்படுவதாகவும், அதனை வீட்டு வாசலில் ஒட்டப் பட வேண்டுமெனக் கோரப்படுவதாகவும் கூறப்பட்டது.

(3-117)

## சீனியின் விலை குறைப்பு

தென்மராட்சி,ஏப்.6

சீனியின் விலை ஒரு ரூபாவினால குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஒரு கிலோ 40 ரூபாவாக விற்கப்பட்ட சீனி கடந்த முதலாம் திகதி தொடக்கம் 39 ரூபாவாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

(க-117)


திரைப்படக் காட்சி
ராஜா திரையரங்கு - யாழ்ப்பாணம்
யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக் கழக
'கலாசுரபி' சஞ்சிகை வெளியீட்டு நிதி சேகரிப்புக்கான
மாபெரும் திரைப்படக் காட்சிகள்
காலம் : நாளை (07.04.2001) சனிக்கிழமை
நுழைவாயிலில் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
வரலாற்றுக் கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:-
பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.
கிளைகள்: ✼ சன்லைற் மல்ரி சேவிஸ்
✼ சன்லைற் தொலைத் தொடர்பு சேவை
கச்சேரியடி T.P:2741 யாழ்ப்பாணம்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
யாழ்ப்பாணம் திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
நூதன பஞ்சதள
இராஜகோபுர மகா கும்பாபிஷேகம்



எழில்மிகு இராஜகோபுரத்தின் தோற்றம்

இன்று (06.04.2001) வெள்ளிக்கிழமை காலை 9.58 மணி முதல் 10.13மணி வரையுள்ள இடபலக்கின சித்தயோகத்தில் இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

ஆசியுரைகள்:
பிரதிஷ்டா பிரதமகுரு:
சிவஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக் குருக்கள்
கிரியா கலாப முக்தாமணி:
சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள் (சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)
பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர் (தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் (நாகேஸ்வரம், அளவெட்டி)
பேராசிரியர் அ.சண்முகதாஸ் (உயர்பட்ட ஆய்வுகள் பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அருளுரை:
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (இரண்டாவது குருமகா சந்நிதானம்)

✼ கும்பாபிஷேகக் கிரியைகளைத் தொடர்ந்து நண்பகல் 12மணியளவில் அன்னதான நிகழ்வும், மாலை 6 மணியளவில் அம்பாள் வெளிவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் மேற்படி நிகழ்வுகளில்
கலந்து கொண்டு அம்பாள் அருள் பெறுக!

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (86199)
என்றும் இறைபணியில்
ஆறுமுகம் சிற்பாலயம்.



NEW SCIENCE COLLEGE
JAFFNA
இணைந்த கணிதம்
A.ரவீந்திரன் B.Sc.
2002 (A/L)
புள்ளி விபரவியல்
Sat., Sun. 1.00 p.m.
07-04-2001 Sat. ஆரம்பம். (86160)



நாளை ஆரம்பம்!
A/L 2002
"இருப்பு மதிப்பிடல்"
07-04-2001
சனி 9 மணி.
கணக்கீடு
D.Sam
DMI.
யாழ். நகர் (86239)



அறிவித்தல்
எமது நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலும் கிளை நிறுவனங்களிலும் நாளை (07.04.2001) சனிக்கிழமை விரிவுரைகள் நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.
இயக்குநர்,
IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/16122)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.